
ஸிதாரா
லக்ஸ் டாய்லட் சோப்பினால்
சுலபமாக
அழகுபடுத்திக்கொள்ளும்
முறையை விவரிக்கிறார்
LUX TOILET SOAP
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்.
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்-
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
☆ ஸினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப் ☆
எழில்வாய்ந்த சருமமே ஒரு ஸ்திரீயின் அரிய பொக்கிஷம். அதனால் மேனியழகை காப்பாற்றிக் கொள்வதில் அசிரத்தையாயிராதீர்கள். லக்ஸ் டாய்லட் சோப்பின் மிருதுவான பாதுகாப்பு முறையைக் கையாளுங்கள். ஸிதாராவின் சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை 30 நாட்கள் ஏன் நீங்களும் பின்பற்றக் கூடாது? மணமுள்ள இவ்வெண்மையான சோப்பின் தாராளமாயுண்டாகும் சுறுசுறுப்பான நுரையை நீங்கள் பிரியப்படுவீர்கள். மேலும் அதன் மிருதுவாக சுத்தம் செய்யும் திறமையைக் கண்டு மகிழ்வீர்கள். ஸினிமா நட்சத்திரங்களுக்கு அழகை அளிக்கும் இம்முறை உங்கள் அருமை சருமத்தையும் அப்பழுக்கற்றதாகவும் பட்டுப்போல் மழமழப்புடையதாகவும் செய்யும்.
LTS. 140-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

மற்றேனைய ப்ரிஸில்களி
னின்றும் மாறுபட்டது



1. உங்கள் பற்களை 60% அதிக செம்மையாகத் துலக்குகிறது
2. விஷக் கிருமிகளகற்றப் பட்ட கிளாஸ் ட்யூபுகளில் ஸீல் செய்யப்பட்டது.
3. நீர் கடக்காது— நனைவுமேற்காது
4. ஒரு வருட உத்தர வாத முடையது.

இப்பொழுது ஸ்டோர்களில்-

மிருகங்களின் மயிரே கிடையாது!

விவரங்களுக்கு:
எஸ். டீ. ஸெய்மூர் & கோ (இந்தியா) லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — கராச்சி — மதராஸ்

டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்

L. D. 6287

ரோஜா மார்க் நெய்

கலப்பிடமில்லாத பால், வெண்ணெய், நெய், உபயோகம் செய்வதால் தேக ஆரோக்கியம் அடைவதுடன் விவசாயத்தையும் பெருகச் செய்கிறது.

பிரசுரம்:—

புத்தம் வெண்ணெயினின்று நெய் தயார் செய்யும்

லிங்கம் & கோ., கோயமுத்தூர்

எல்லா ஊர் கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும், கோவையில் 14/86, ஒப்பணக்கார வீதியிலும், 90, அன்சாரி வீதியிலும், 12 வீசை 3 வீசை புத்தம் டின்களில் கிடைக்கும்.



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண், மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

●

மதராஸ் ஸிடி ஏஜண்டுகள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும் சோல் ஏஜண்டு:

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 4	1946 ஆகஸ்டு 25	வியய ஆவணி 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

உலகம் பலவிதம் என்று சொல்லப்பட்ட போதிலும், உலகத்து மனிதர்களைப் பொதுவாக இரண்டு விதமாய்ப் பிரிக்கலாம். ஒருவித மனிதர்கள் சொந்த நலத்துக்கு உழைத்து மாய்கிறவர்கள்: இன்னொரு வகை மனிதர்கள் பொது நலத்துக்கே உழைத்தும் பிறருக்காகவே ஜீவித்திருப்பவர்கள்.

இவ்விடம் தமிழ் நாட்டின் கல்வித் துறையில் தமக்கென வாழாது பிறருக்காகவே வாழும் உத்தமர்களில் திருச்சி நேஷனல் காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ வி. சாரநாத அய்யங்கார் முன்னணியில் நிற்கிறார். இவரும் பேராசிரியர் ஸ்ரீ ஏ. ராமய்யரும் கல்வித் துறையில் இராமலக்ஷ்மணர்களைப் போலும் அர்ச்சுனனையும் கிருஷ்ணனையும் போலும் இணை பிரியாத இரட்டையர்களாகத் தொண்டு புரிந்து வந்திருக்கிறார்கள். இருவரும் சிறந்த தேசிய வாதிகள்: தங்களுடைய தேசிய ஆர்வத்தை யெல்லாம் வெறும் பேச்சிலே விரயம் செய்து விடாமல் நிலையான நிர்மாணத் தொண்டு செய்து வருகிறவர்கள்.



எல்லாத் தொழில்களையும் விட ஆசிரியர் தொழிலுக்குச் சம்பளம் குறைவு என்பது பிரசித்தியான விஷயம். அதிலும் நேஷனல் காலேஜ் போன்ற தேசிய ஸ்தாபனங்களில் சம்பளம் இன்னும் குறைவு.

அப்படிப் பெற்ற சொற்ப சம்பளத்திலேயும் ஒரு பகுதியைப் பிரின்ஸிபால் சாரநாதய்யங்கார் திருப்பிக் கலாசாலைக்கே கொடுத்து உதவி வந்தாரென்றால், அவருடைய பரோபகார சிந்தையைப் பாடுவதற்குக் கம்பனையும் பாரதியையும் போன்ற கவிகள் தான் வர வேண்டுமே யல்லாமல் நம்மால் எப்படி முடியும்?

ஸ்ரீ வி. சாரநாதய்யங்கார் நேஷனல் காலேஜ் பிரின்ஸிபாலாகி வருஷம் இருபத்தைந்து ஆகிறது. தாம் வளர்த்த கலைக் கோயிலின் வைர விழாவை நடத்தி வைப்பதற்காகவே இன்னும் அவர் உத்தியோகம் வகித்து வருகிறார். அந்த வைர விழா சந்தர்ப்பத்தில் நேஷனல் காலேஜ் மேலும் வளர்ச்சி அடைவதற்காக அளிக்கும் பொருளுதவியை யெல்லாம் தமக்குச் செய்யும் கனகாபிஷேகம் என்றே அந்த உத்தம புருஷர் எண்ணி மகிழ்வார்.

நேஷனல் காலேஜ் நிதிக்குப் பண உதவி செய்ய விரும்புவோர், ஸ்ரீ எம். என் என் மணி, வைர விழாக் காரியதரிசி, திருநிதி பாங்கி, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். பத்து ரூபாய் மணியார்டர் முதல் பதினாயிரம் ரூபாய்ச் செக்கு வரையில் அனுப்பி வைக்கலாம். கொடுத்த வரையில் பலன் உண்டு.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 4

என்ன சேதி?

பாவளி உண்டு

இந்த வருஷம் "கல்கி" தீபாவளி
லர் உண்டு. — எனவே நமது நேயர்
ளின் வீடுகளில் எல்லாம் தீபாவளிப்
ண்டிகையும் கொண்டாட்டமாக உண்டு
ன்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
ள்கிறோம். தமிழ் நாட்டின் முற்
லத்துச் சிற்பிகள் சித்திரக்காரர்களும்
ந்தக் காலத்துச் சிறந்த எழுத்தாளர்
ளும் ஓவியக் கலைஞர்களும் சேர்ந்து
மது தீபாவளி மலரை அற்புத அழகு
ய்ந்த வாடா மலராகச் செய்து தரு
ர்கள். அப்புறம் நேயர்கள் திடுக்கிடா
க்கும் பொருட்டு, மலரின் மேன்மைக்
த் தகுந்தபடி விலையும் அதிகமாய்த்தா
ருக்கும் என்பதைச் சொல்லி வைக்
றோம். யுத்தம் முடிந்து விட்டாலும்
லை வாசிகள் முன்னை விட அதிகமாகி
ருப்பது நேயர்கள் அறிந்ததே. காகிதத்
தப் பொறுத்த வரையில் மற்றப்
பொருள்களைவிட விலை இன்னும் அதிகமா
ருக்கிறது. சென்ற வருஷம் நாம்
பாவளி மலர் வெளியிடாததற்கு இது
ம் ஒரு முக்கிய காரணமாகும். எனினும்,
தன் பலனாக, எத்தனை நேயர்களின்
ணியாத கோபத்துக்கு ஆளானோம்
ன்பதை எண்ணும்போது, இவ் வருஷம்
பாவளி மலர் வெளியிடாதிருக்கத்
ரியம் போதவில்லை. இப்போது இவ்
ளவுதான். மற்றவை பின்னர்.

கையை விரிக்கிறார்

பிரதம மந்திரி பிரகாசம்காரு கையை
ரிக்கிறார்! வாயால் பயங்கரமான
ர்த்தைகளைக் கூறிவிட்டுக் கையை
லமாக விரிக்கிறார்! "சில மாத காலத்
க் கெல்லாம் வங்காளத்தில் நடந்தது
ால் தென்னிந்தியாவிலும் நடக்கலாம்.
னிதர்கள் சாலைகளிலும் வீதிகளிலும்
பட்டினியால் செத்து விழும்படி நேரிடலாம். அப்படியெல்லாம் நடந்தால், அதற்கு நான் பொறுப்பாளியல்ல!" என்று பெரிய வெடிகுண்டைத் தூக்கி நம் தலையில் போடுகிறார். இந்த மாகாண ஆட்சிப் பொறுப்பை வகிக்கும் அவர் பொறுப்பாளியல்லவென்றால் வேறு யார் பொறுப்பாளியாம்? இந்தியா கவர்ன்மெண்டார்தான் பொறுப்பாளியாம்! இந்தியா கவர்ன்மெண்டார் சென்னைக்கு வேண்டிய அரிசியை அனுப்ப மாட்டோம் என்கிறார்களாம்! சென்னைக்கு வந்த அரிசியையும் வேறு மாகாணத்துக்கு அனுப்பி விட்டார்களாம்! சென்னையிலிருந்து உதவி உணவு மந்திரி ஸ்ரீ ராகவ மேனனும் தலைமைக் காரியதரிசி ஸ்ரீ எல். வி. ராமமூர்த்தியும் பறந்தோடிச் சென்று நிலைமையை எடுத்துச் சொல்லி வற்புறுத்திக் கேட்டும் அந்தப் பொல்லாத இந்தியா கவர்ன்மெண்டார் பிடிவாதமாகச் சென்னையின் வாயில் மண்ணைப் போடுவோம் என்று சொல்கிறார்களாம். இப்படியே அவர்கள் பிடிவாதப் பிடித்து வந்தால் ஜனங்கள் தெரு வீதிகளிலே செத்து விழவேண்டியதுதான் என்று கொட்டைப் பருந்துகளைக் கூவி அழைக்கிறார் ஸ்ரீ பிரகாசம்காரு.

தட்டிக் கழிக்கிறீர்!

பிரதம மந்திரியை இரண்டொரு கேள்வி கேட்க விரும்புகிறோம். இந்தியா கவர்ன்மெண்டார் சென்னை மாகாணத்தின் பேரில் இவ்வளவு கோபமோ உதாசீனமோ கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? சென்னை மாகாண வாசிகள் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அப்படி என்ன பெரிய துரோகத்தை — மற்ற மாகாணத்தினர் செய்யாத துரோகத்தைச் — செய்தார்கள்? சென்னையின் மீது இந்திய சர்க்கார் பட்ச

பாதம் காட்ட அப்படி விசேஷ காரணம் ஒன்றும் இல்லையே? ஒருவேளை சென்னை சர்க்காரின் சார்பாகச் சென்ற பிரதிநிதிகளுக்குச் சென்னையின் கட்சியை வற்புறுத்திச் சொல்லத் திறமை இல்லையா? அல்லது சென்னை மாகாணத்தார் வேண்டிய அளவு தானியங்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு வெறுமனைக்காவது "டஞ்சம், பஞ்சம்!" என்று சத்தம் போடுவதாக இந்திய சர்க்கார் எண்ணுகிறார்களா? அப்படி அவர்கள் எண்ணுவதற்கு இடம் கொடுக்கும்படி ஏதேனும் நடந்திருக்கிறதா?

அல்லது, ஒருவேளை சென்னை மாகாணத்தில் வேண்டிய அளவு தானிய உற்பத்தியைப் பெருக்க வசதியிருந்தும் அப்படிச் செய்யவில்லையென்று இந்தியா கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்களா?

ஒருவேளை அப்படி இந்திய சர்க்கார் எண்ணியிருந்தால் அதில் ஓரளவு உண்மையிருக்கிறதென்பதை நமது பிரதம மந்திரி ஒப்புக்கொண்டே தீர வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அதிக விலை கொடுத்து மக்கல் அரிசியையும் உமிக் கோதுமையையும் வாங்குவதில் சென்னை சர்க்கார் காட்டும் சிரத்தையில் பாதிகூட உள்நாட்டில் தானிய உற்பத்தியைப் பெருக்குவதில் காட்டவில்லைதான்.

உணவில்லாமல் மக்கள் வீதிகளில் விழுந்து மடிய நேர்ந்தால் அதன் பொறுப்பு முழுதும் ஸ்ரீ பிரகாசம் மந்திரி சபையின் தலையிலேதான் விழும்; இந்திய சர்க்கார் தலையில் போடப் பார்ப்பதில் பிரயோஜனமில்லை. ஆகையால் அத்தகைய பயங்கரமான கதிக்குச் சென்னை மாகாணத்தை உள்ளாக்காமல் தக்க ஏற்பாடுகளைச் செய்யக் கோருகிறோம்.


பரிதாப வாழ்க்கை


இந்த நாளில் எல்லாவகைத் தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர்களும் தங்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொள்ளப் பிரயத்தனப்படுகிறார்கள் அல்லவா? அதுபோலவே வட ஆற்காடு ஜில்லா பஞ்சாயத்து போர்டு வாரண்டு ஆபீஸர்கள் அண்டு பில் கலெக்டர்கள் சங்கம் பிரயத்தனப்படுவதும் இயல்புதான். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் நமக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் வாரண்டு ஆபீஸர்கள் அண்டு பில் கலெக்டர்கள் அநுபவிக்கும் கஷ்டங்களைக் கல்லும் கரையும்படி எடுத்து உரைத்திருக்கிறார். தபால்காரர்கள் வந்தால் குடும்பஸ்தர்கள் சந்தோஷத்துடன் வீட்டுக்கு வெளியில் வந்து, "தபால் உண்டா? மணியார்டர் உண்டா? பத்திரிகை வந்திருக்கிறதா?" என்று கேட்கிறார்களாம்! வாரண்டு ஆபீஸர்களும் பில் கலெக்டர்களும் போனாலோ ஒன்று கதவைச் சாத்திக் கொள்கிறார்களாம்; அல்லது எரிந்து விழுகிறார்களாம்! இப்படிப்பட்ட பரிதாப வாழ்க்கை நடத்தும் வாரண்டு ஆபீஸர்கள் அண்டு பில் கலெக்டர்கள் ஆகஸ்டு மாதம் 4௳ ஆம்பூரில் ஒரு மகாநாடு நடத்தினார்கள். அந்த மகாநாட்டைத் திறந்து வைப்பதற்காக ஸ்தலஸ்தாபன மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸை அழைத்தார்கள்.

பச்சை முகஸ்துதி

நமக்கு வந்திருக்கும் மகாநாட்டு அழைப்புப் புரோகிராமில் காலை எட்டு மணிக்கு 'பிரேக் பாஸ்ட்' (காலைச் சாப்பாடு) மத்தியானம் 12 மணிக்கு 'டின்னர்' ஆகிய வேலைத் திட்டங்கள் யதார்த்தமாக அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்படிக் கனம் மந்திரியின் வயிற்றுக்கு உணவளித்த பிறகு மந்திரியின் செவிக்கும் இனிய அறுசுவை உண்டி அளித்திருக்கிறார்கள். அவருக்கு அளிக்கப்பட்டுள்ள நல்வரவேற்புப் பத்திரத்தில் பெரிய பெரிய கொட்டை எழுத்தில் "தன்னலமின்றிப் பிறர்நலத்திற்காகப் பெரிதும் உழைத்து வரும் ஸ்ரீ டேனியல் தாமஸ் அவர்களே! வருக! வருக!" "பிறர்நலம் கருதும் புண்ணிய சீலரே! வருக!" என்றெல்லாம் பச்சை முகஸ்துதியை வேண்டிய மட்டும் செய்திருக்கிறார்கள். செய்து விட்டு, "இந்தப் பஞ்சகாலத்தில் எங்களுக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தைக் கொண்டு குடும்பங்களை நிர்வகிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது" என்ற பஞ்சப் பாட்டையும் பாடியிருக்கிறார்கள். இதற்கு மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸ் அவர்கள் என்ன பதில் சொன்னார் என்பது தெரியவில்லை.

வாரண்டு ஆபீஸர்கள் அண்டு பில் கலெக்டர்கள் சங்கத்துக்கு நாம் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்:— வெறும் முகஸ்துதிகளாலும் உபசாரப் பத்திரங்களினாலும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் காலமெல்லாம் மலையேறி விட்டது. அத்தகைய முகஸ்துதியை இந்தக் காலத்துக் காங்கிரஸ் மந்திரிகள் (ஸ்ரீ டேனியல் தாமஸ் உள்பட) விரும்பமாட்டார்கள். உங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்திப் போராடுங்கள். நியாயமான முறையில் போராடி வெற்றி பெறுங்கள். இந்த நாளில் வேறு வழி ஒன்றும் பிரயோஜனப்படாது.


நெருப்புடனும்
சுஹ்ரவர்த்தி
வெடி குண்டுடனும்
காலிகளுக்குத் தூபம்
விளையாடுவது
கலக நாளுக்கு விடுமுறை
ஆபத்தாய் முடியாமல் என்ன செய்யும்?
கல்கத்தா ரகளை


கலவரத்தில் மாண்டவர்களுடைய ஆவி
பதவியை விட்டுச் செல்!
இந்தக் கோரக்காட்சிகளுக்கு நீயே பொறுப்பாளி.
வங்காளப் பிரதமர் சுஹர்வர்த்தி
கல்கத்தா கலவரம்

பாகிஸ்தானுக்குச் சாவுமணி

ஆறு வருஷத்துக்கு முன்னால் முஸ்லிம் லீக் தலைவர்கள், "எங்களுக்குப் பாகிஸ்தான் வேண்டும்" என்ற கோஷத்தைக் கிளப்பினார்கள்.

'பாகிஸ்தான்' என்றால் என்னவென்று விளக்கிச் சொல்லும்படி எவ்வளவோ பேர் கேட்டதற்கு அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை.

"பாகிஸ்தான் கொடுப்பதாக முதலில் ஒப்புக் கொள்ளுங்கள்; அப்புறம் எல்லாம் விளக்கிச் சொல்கிறோம்!" என்றார்கள்.

கடைசியாக இப்போது அவர்கள் ஒன்றும் விளக்கிச் சொல்லாமலே 'பாகிஸ்தான்' என்றால் என்னவென்பது விளங்கிப்போய் விட்டது!

சென்ற வாரத்தில் கல்கத்தாவில் அது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

அப்படி அது வெட்ட வெளிச்சமாகும் விஷயத்தில், வங்காளப் பிரதம மந்திரி சுஹரவர்த்தி முக்கிய கைங்கரியத்தைச் செய்தார்.

'பாகிஸ்தான்' என்றால் என்னவென்பதை விளங்கச் செய்ததோடு அவர் நின்று விடவில்லை.

அவர் விளக்கிய பாகிஸ்தானுக்கு அவரே சாவுமணியும் அடித்து விட்டார்!

மூன்று நாள் சேர்ந்தாற்போல் அந்தச் சாவுமணி இடைவிடாமல் அடித்துக் கொண்டிருந்தது!

அந்த மூன்று நாளில் செத்துப் போன ஏழாயிரம் மக்களின் பிரேதங்களோடு சேர்த்துப் பாகிஸ்தானையும் ஆழப் புதைத்தாகி விட்டது!

கல்கத்தா நகரின்மேல் வான வெளியிலே நின்று பாகிஸ்தானுக்குப் பலியான ஏழாயிரம் பேர்களின் ஆவிகள் பயங்கரக் குரலில், "பாகிஸ்தான் ஒழிக!" என்று கோஷமிடுகின்றன.

கல்கத்தா நகரின் வீதிகளில் எல்லாம் அகாரண மூர்க்க ஆவேசத்துக்கு இரையாகி விழுந்த குற்றமற்ற மக்களின் இரத்தத்தினால் "பாகிஸ்தான் ஒழிக!" என்று எழுதியிருக்கிறது.

ஜனாப் ஜின்னாவுக்கும் மற்ற முஸ்லிம் லீக் தலைவர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபத்தைச் செலுத்துகிறோம்.

அவர்களுடைய பாகிஸ்தான் சாம்ராஜ்யம் ஒரு மனோராஜ்யக் கனவாக மறைந்து விட்டது!

இனி அது என்றென்றைக்கும் உயிர்த்தெழப் போவதில்லை.

* * *

ஜனாப் ஜின்னாவும் மற்றுமுள்ள முஸ்லிம் லீக் தலைவர்களும் "பாகிஸ்தான்" என்றால் என்னவென்று விளக்கிக் கூற மறுத்த போதிலும், நம்மிலே சிலர் அதற்கு நல்ல முறையில் அர்த்தம் செய்வதற்கு முயன்றோம்.

"முஸ்லிம்கள் பெரும்பான்மையோராயுள்ள பிரதேசங்களில் முஸ்லிம்களின் தனிச் சுதந்திர ராஜ்யம் வேண்டும்" என்று அவர்கள் கோருவதாக வைத்துக் கொண்டோம்.

இந்த அர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு, "பாகிஸ்தான் கோரிக்கையை ஒப்புக்கொண்டு விடலாமே? வெள்ளைக்காரரிடமிருந்து இந்தியா சுதந்திரம் அடைய வேண்டியதுதானே முக்கியம்? சுதந்திரம் அடைந்த இந்தியாவில் முஸ்லிம்கள் தனிக் குடித்தனம் செய்ய விரும்பினால் செய்து கொண்டு போகட்டுமே? அதை ஏன் நாம் எதிர்க்க வேண்டும்?" என்று நம்மிலே சிலர் கருதினோம்.

இந்த எண்ணத்தின்பேரில் பாகிஸ்தான் கோரிக்கையை ஒப்புக் கொள்ள ஒரு காலத்தில் மகாத்மா காந்தி சித்தமாயிருந்தார். ஜனாப் ஜின்னாவோடு அவர் சமரசம் பேசுவதற்குச் சென்றார். பாகிஸ்தான் விஷயமான சில திட்டமான பிரேரணைகளையும் கொண்டு சென்றார்.

மூன்று வாரம் மகாத்மாவுக்கும் ஜனாப் ஜின்னாவுக்கும் பம்பாயில் பேச்சு வார்த்தைகள் நடந்தன.

ஆயினும், முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

ஏனெனில், பாகிஸ்தானின் "முஸ்லிம்கள் பெரும்பான்மையோராயுள்ள

பிரதேசங்கள்'' மட்டும் உட்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ள ஜனப் ஜின்னு தயாராயில்லை. அப்படிப்பட்ட பிரதேசங்களைத் தனிப்படுத்திப் பார்க்கும்போது வடமேற்கில் சில ஜில்லாக்களும் வடகிழக்கில் சில ஜில்லாக்களுந்தான் பாகிஸ்தானில் வருவதை ஜனப் ஜின்னு கண்டார்.

இப்படிப்பட்ட பாகிஸ்தான் மிகவும் சொற்பஸ்தான் ஆகிவிடுவதை அறிந்துப் அவருக்கு அசாத்தியமான கோபம் வந்துவிட்டது.

பாகிஸ்தானை இப்படி விண்டு காட்டிவிட்ட ராஜாஜி பேரிலும் மகாத்மாவின் பேரிலும் அவர் எரிந்து விழுந்தார்.

''அதெல்லாம் முடியாது; ஹிந்துக்கள் பெரும்பான்மையாயுள்ள பிரதேசங்களையும் சேர்த்துப் பெரிய பாகிஸ்தானைச் செய்து கொடுக்க வேண்டும்!'' என்றார்.

இது எந்த நியாயத்துக்கும் அடுக்காத காரியமாதலால் மகாத்மாவினால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சமரசப் பேச்சு முறிந்து விட்டது.

* * *

இப்படி ஒரு பக்கத்தில் பாகிஸ்தானுக்காகப் பேச்சு நடந்து கொண்டிருந்தபோது வங்காளம், அஸ்ஸாம், சிந்து, பஞ்சாப் மாகாணங்களில் உள்ள ஹிந்துக்கள் மகாத்மாவின் பேரில் ஒரே கோபமாகி விட்டார்கள். சீக்கியர்கள் காங்கிரஸை விட்டே வெளியேறத் தீர்மானித்து விட்டார்கள்!

பாகிஸ்தான் என்ற பேச்சே அவர்களுக்கெல்லாம் கர்ண கடூரமாயிருந்தது. அதைக் காதாலேயே கேட்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்! பாகிஸ்தானைப் பற்றி யாராவது பேசினால்கூட அவர்கள் ஆத்திரப்பட்டார்கள்.

பாகிஸ்தான் இலட்சணம் இப்படித்தான் இருக்குமென்பதை அவர்கள் ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொண்டிருந்தார்கள் போலும். ஓரளவு அவர்களுக்குப் பாகிஸ்தான் அநுபவமும் இருந்திருக்கக் கூடும்.

ஆகையினால்தான் அப்படி அவர்கள் பாகிஸ்தான் என்ற பேச்சைக் கேட்டே ஆத்திரப்பட்டார்கள்.

அவர்களுடைய ஆத்திரத்துக்கெல்லாம் காரணம் உண்டு என்பது இப்போது நன்கு தெரிந்து விட்டது.

அவர்களுடைய சந்தேகங்கள் உண்மையான ஆதாரங்கள் உடையவை என்பதும் தெரிந்து போய்விட்டது.

பாகிஸ்தான் என்று சொன்னாலே வங்காளிகள் ஏன் அவ்வளவு கோபப்பட்டார்கள் என்பதைச் சென்ற வாரத்துக் கல்கத்தா சம்பவங்கள் நன்கு அறிவுறுத்துகின்றன.

குத்துப்பட்டுச் செத்துப் போன ஏழாயிரம் மக்களின் ஆவிகள் அந்தக் காரணத்தை அலறுகின்றன.

எரிந்து போன வீடுகளும் அவற்றிலிருந்த உடைமைகளும் வெந்துபோன உடலங்களும் அவற்றிலிருந்த எலும்புக் கூடுகளும் சாட்சி கூறுகின்றன.

''பாகிஸ்தான் என்றால் ஏதோ சாதாரண விஷயம் என்று நினைத்து ராஜிப் பேச்சுப் பேசினீர்களே? பாகிஸ்தான் இலட்சணத்தைப் பார்த்தீர்களா?'' என்று கேட்கின்றன.

மேற்படி கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நாம் வாய் மூடி மௌனிகளாகிறோம்.

* * *

சில நாளைக்கு முன்பு வங்காளப் பிரதம மந்திரி — கலப்பற்ற முஸ்லிம் லீக் சர்க்காரின் தலைப் பெரும் தலைவர் — ஜனப் சுஹ்ராவர்த்தி, ''வங்காளத்தில் நாங்கள் பூரண சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்ளப் போகிறோம்'' என்றார்.

நாமும் ''ஏதோ போகட்டும்! எப்படியாவது வங்காளத்துக்குச் சுதந்திரம் கிடைத்தால் சரி! முதன் முதலில் சுதந்திரப் போரைத் தீவிரமாக ஆரம்பித்த வங்காளத்தில் முதன் முதலாகச் சுதந்திரம் ஸ்தாபிக்கப்படுவது பொருத்தந்தானே?'' என்று கருதி, அந்தக் கருத்தை வெளியிட்டோம்.

ஆனால் நாம் எழுதிய எழுத்து அச்சாவதற்குள்ளே ஜனப் சுஹ்ராவர்த்தியின் 'சுதந்திரம்' எப்படிப்பட்டதென்பது பட்டவர்த்தனமாகி விட்டது.

அவர் ஸ்தாபிக்க விரும்பிய சுதந்திரம், பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பொதுஜனங்களின் அரசியல் சுதந்திரம் அன்று.

கொல்லுவதற்கும் குத்துவதற்கும் சுதந்திரம், — வீடுகளுக்கும் வாகனங்களுக்கும் தீ வைக்கும் சுதந்திரம், — கொள்ளையடிக்கவும் கொலை செய்யவும் சுதந்திரம், — உயிருள்ள மனிதர்களைத் தூக்கி நெருப்பிலே போடும் சுதந்

ரம்,—இப்படிப்பட்ட கோரப் பயங்கர தந்திரத்தையே அவர் குறிப்பிட்டார் என்பது தெரிந்து போய்விட்டது.

இதை இவ்வளவு சீக்கிரமாக—வீண் காலதாமதம் செய்யாமல். — விளக்கி விட்டதற்காக ஜனாப் சுஹ்ரவர்த்திக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

“என்னைத் தாக்குகிறவர்கள் எல்லாம் தாக்குங்கள்; திட்டுகிறவர்கள் எல்லாம் திட்டுங்கள். ஆனால், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு மட்டும் உதவி செய்யுங்கள்!” என்று ஜனாப் சுஹ்ரவர்த்தி கண்ணும் கண்ணீருமாய் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு முதலாவது செய்ய வேண்டிய முயற்சி ஜனாப் சுஹ்ரவர்த்தி வகிப்பதற்கு லாயக்கில்லாத அரசாங்கப் பொறுப்பிலிருந்து அவரை நீக்குவதுதான் என்று வங்காளத்துப் பத்திரிகைகள் ஒரு முகமாகக் கூறுகின்றன.

அவர்களுடைய அபிப்பிராயத்தை நாம் ஆமோதிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

ஒன்று, ஜனாப் சுஹ்ரவர்த்தியே இத்தகைய பயங்கர கோர சம்பவங்களுக்குக் காரண பூதராயிருந்திருக்க வேண்டும்.

அல்லது ஒரு பெரிய மாகாணத்தை ஆளுவதற்கு அவர் சிறிதும் லாயக்கற்றவராயிருக்கவேண்டும்.

இந்த இரண்டிலொன்று இல்லாமல் இவ்வளவு பயங்கரமான கலவரமும் உயிர்ச் சேதமும் நடந்திருக்க முடியாது.

* * *

கல்கத்தா கலவரம் மிகப் பயங்கரமானது: அதைப்பற்றி இனிமேல் வரப்போகும் தகவல்கள் அதை இன்னும் பயங்கர சம்பவமாகச் செய்யவும் கூடும். ஆயினும் மேற்படி கல்கத்தா கலவரத்திலிருந்து நாம் தவறான முடிவுகளைச் செய்துவிடக் கூடாது.

இரண்டுவிதத் தவறான பாடங்களைக் கல்கத்தா சம்பவங்களிலிருந்து கற்பிக்கச் சிலர் முயற்சி செய்யக்கூடும்.

ஒன்று, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமில்லை என்பது.

இரண்டாவது, இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆட்சியின் பாதுகாப்பு வேண்டும்; பூரண சுதந்திரம் உதவாது என்பது.

இந்த இரண்டு முடிவுகளும் தவறானவையேயாகும்.

கல்கத்தா சம்பவங்கள் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப் படுவதின் அவசியத்தை மேலும் வற்புறுத்தத் தான் செய்கின்றன.

சமூகத் துவேஷப் பிரசாரத்தின் பயன்கள் இவ்வளவு பயங்கரமானவை என்பதைத் தெரிந்துகொண்டு முஸ்லிம் லீக் தலைவர்களே நல்வழிக்குத் திரும்புவது ஒருவேளை சாத்தியமாகலாம்.

இது நடக்கா விட்டாலும், முஸ்லிம் பொது மக்களின் மனோபாவம் நிச்சயமாக மாறுதலடையும். சமூகத் துவேஷப் பிரசாரத்துக்கு அவர்கள் செவி கொடுக்கத் தயங்குவார்கள்.

சில சுயநலத் தலைவர்களின் அதிகார வெறிக்காக நாட்டின் நலமும் அமைதியும் பலி கொடுக்கப் படுவதை அவர்கள் உணராமலிருக்க முடியாது.

கல்கத்தா சம்பவமானது பிரிட்டிஷ் பாதுகாப்பின் அவசியத்தை நிரூபிப்பதாக எண்ணுவதும் மௌடீகமாகும்.

அந்த முறையில் சில அயல்நாட்டுப் பத்திரிகைகள் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டன.

ஆனால் புது டில்லியில் வைஸ்ராய் வேவலும், கல்கத்தாவின் கவர்னர் பர்ரோஸும் வீற்றிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் இத்தகைய விபரீத சம்பவங்கள் நடந்திருக்கின்றன!

பிரிட்டிஷார் இன்னும் இந்தியாவை விட்டுப் போய் விடவில்லை. பிரிட்டிஷ் அதிகாரிகளும் பிரிட்டிஷ் சோல்ஜர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

புது டில்லியில் கலப்பற்ற பிரிட்டிஷ் நிர்வாகந்தான் நடந்து வருகிறது!

ஆகவே, கல்கத்தா கலகத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியின் திறமையோ அவசியமோ நிரூபிக்கப் படவில்லை.

அப்படியே பிரிட்டிஷார் போய் விடுவதால் கல்கத்தா சம்பவத்தைப் போன்ற பல சம்பவங்கள் நேரிடுவதாயிருந்தால், அதையும் நாம் அநுபவித்துத் தான் தீரவேண்டும்.

புண்ணைத் தேகத்துக்குள்ளே மூடி வைத்துப் புரையோடும்படி விடுவதைக் காட்டிலும் அதைக் கீறிவிட்டு ஆற்றுவதே நல்லது என்று எல்லாருமே ஒப்புக் கொள்வார்கள்.

எப்படிப் பார்த்தாலும், பிரிட்டிஷார் மேலும் இந்தியாவில் இருப்பதற்கு எந்தவித நியாயமும் இல்லை. அவர்கள் போகத்தான் வேண்டும்.

★ வட்ட மேஜை ★

மாயவரம்
9—8—46

அன்புள்ள 'கல்கி' மாமா அவர்களுக்கு.

இவ்விடம் நானும், ஊருக்கிளைத்த வாத்தியார் அப்பா, அம்மா, தம்பிமார், தங்கைமார் (எண்ணிக்கையில் அரை டஜன்) எல்லோரும் இன்னும் உயிருடன்தானிருக்கிறோம். கால் பட்டினி, அரைப் பட்டினி, முக்கால் பட்டினியாக எப்படியோ காலம் போகிறது. காப்பி, பால் முகத்தில் விழித்து ரொம்ப நாளாகிறது. இதுவரையில் அதற்குக் காரணம் தெரியாமலிருந்தேன். எங்கள் அப்பா ஒரு நாள் ஊருக்கிளைத்த சகபாடிகள் சிலருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் உண்மை விளங்கியது. வாத்தியாரின் குழந்தைகள் காப்பி, பால் குடிப்பதென்றால் இப்போதைய சம்பளம் காணாதாம். அதனால் தான் தங்கள் 28-7-46 'கல்கி'யில் வாத்தியாருக்கு வீட்டுச் செலவு புள்ளி விவரம் கணக்கிட்டபோது அதில் பால் செலவு குறிப்பிடவில்லையாம். இனிமேல் எனக்குப் பாலும் வேண்டாம்; காப்பியும் வேண்டாம். வேளா வேளைக்குத் தட்டில்லாமல் வயிறு நிறையப் பழையதும் ஏதாவது ஊறுகாயும் கிடைத்தால் போதும். உங்கள் அபிப்பிராயம்போல் குறைந்தது 40 ரூபாய் சம்பளமும் 20 ரூபாய் அலவன்ஸும் கொடுத்து விட்டால் ஏதோ கொஞ்சம் பரிகாரமாகத்தானிருக்கும். பம்பாயில் கூட ஊருக்கிளைத்த வாத்தியார்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறதாம். வாத்தியார்களுக்குக் குறைந்த சம்பளம் 30 ரூபாயாம்; அதிகச் சம்பளம் 75 ரூபாயாம். பம்பாய் மாகாணக் கல்வி மந்திரி அறிவித்ததாக அடுத்த வீட்டு சுப்பு சொன்னான். பம்பாய் மந்திரிகள் செய்தால் நமக்கு என்ன ஆயிற்று? சென்னை மந்திரிகள் தான் அழுத பிள்ளைக்கு வாழைப் பழம் கொடுப்பதுபோல் மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் உயர்த்தியிருக்கிறார்களே? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. வீட்டில் நாங்கள் அரை டஜன் பேராயிருக்கிறோம். எங்கள் கழுத்தில் அட்டைகளை மாட்டித் தொங்க விட்டுக் கொண்டு, "நாங்கள் உபாத்தியாயரின் பிள்ளைகள். வாத்தியார் குடும்பங்களுக்குத் தருமம் செய்யுங்கள்!" என்று சொல்லிக்கொண்டு ஆளுக்கொரு உண்டிக் கலயத்தையும் எடுத்துக்கொண்டு தெருத் தெருவாகச் சென்று யாசகம் கேட்டால் என்ன? எங்கள் அப்பா ஊர்ப் பிள்ளைகளுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அந்தப் பிள்ளைகளின் அம்மா அப்பாக்கள் எங்கள்மேல் மனம் இரங்க மாட்டார்களா? தங்கள் யோசனை என்ன, மாமா? உங்கள் பதிலுக்காகத் தபாலாபீஸிலேயே காத்திருப்பேன், கையில் உண்டிக் கலயத்துடன்!

இப்படிக்கு,
அம்பிப் பயல்.

விருதுநகர்
12—8—46

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு.

இதுவரையில் தங்கள் பத்திரிகையில் ஐந்து வகையான தொழிலாளர்களின் குறைகள் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு சிறிது தீர்க்கப்பட்டிருக்கிறது. கலாசாலை படிப்பு வரை ரூ. 3000, 4000 செலவு செய்து படித்துவிட்டு வரும் சர்க்கார் குமாஸ்தாக்கள் தினம் ஒரு ரூபாய் விதம் ஊதியம் பெற்று வருகிறார்கள். உடலினின்று உயிரைப் பிரித்து விடாமல் இருக்க மக்கிப் போன எட்டு அவுன்ஸ் அரிசியை உட்கொண்டு, காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை பேனாவினால் கடிதத்தை உழுது விட்டு, ஆபீஸர்களின் வசைமொழிகள் காதுகளில் சிங்காரம் செய்ய காகிதக் குவியலிலிருந்து வெளிக் கிளம்பும் சர்க்காரைத் தாங்கும் தூண்களாகிய ஏழைக் குமாஸ்தாக்களின் பொறுமை, கர்ணனின் பொறுமையையும் ஒரு படி தாண்டி விட்டது.

அரைக்கீரை முதல் அரிசி வரை உள்ள ஏழைகளின் உணவுப் பொருள்கள் 3 மடங்கு 4 மடங்கு விலை அதிகரித்திருக்கும்பொழுது, குமாஸ்தாக்கள் வீடு என்ற பெயருள்ள எலிப் பொந்துக்கு ரூ. 10, 15 என வாடகையாகக் கொடுத்துவிட்டு, பாக்கியில் கால் வயிற்றை நிரப்பிப் பட்டினியாய்க் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஜனநாயக ஆட்சியில் உள்ள மந்திரிகள் காரியதரிசிகள், எம். எல். ஏக்கள் உள்பட எல்லோரும் கால நிலைமையை உத்தேசித்துத் தங்கள் சம்பளங்களை 2, 3 மடங்குகள் உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். ரூ. 500 போதாது என்று ரூ. 1500 வாங்கி உல்லாசப் பிரயாணத்திலும், உபசாரப் பத்திரத்திலும் காலத்தைப் போக்கி வருபவர்களுக்குப் பசியின் கொடுமை தெரியவா போகிறது?

மதுரை—இராமநாதபுரம் ஜில்லாக்களைச் சேர்ந்த சர்க்கார் குமாஸ்தாக்களின் சங்கம், நவம்பர் 4-ம் தேதிக்குள் குறைகள் நீக்கப்படாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வதாக எச்சரிக்கைகளை சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது. மேலும் ராணுவத்திலிருந்து வருபவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக 1943-ம் வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட குமாஸ்தாக்களை நீக்குவதெனச் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்று குமாஸ்தாக்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரு குமாஸ்தா செய்து கொண்டு யுத்தகாலத்திலே குறைவான சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, மூன்று வருஷமாய் உழைத்த அநுபவஸ்தர்களை வெளியேற்றி விட்டுப் போர்க்களத்தில் சேவை செய்து திரும்பிய வீரர்களுக்கு வேலை தருவதென்பது சரியல்ல. ராணுவ சேவை புரிந்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமானால் உபயோகமுள்ள யுத்த பிற்கால திட்டங்கள் எவ்வளவோ இல்லையா?

பத்து வருஷமாக உழைத்துச் சகல கஷ்டங்களையும் அநுபவித்தவர்களை வேலைகளில் நிரந்தரமாக்காமல் தள்ளுவது பொதுஜனப் பொறுப்புள்ள ஆட்சியில் நடக்கும் நீதியான முறையா?

குறைந்த பக்ஷம் சர்க்கார் ரெக்கார்ட் குமாஸ்தாக்களின் சம்பளம் ரூ. 75/5/100 எனவும்,

2-வது கிரேட் குமாஸ்தாக்கள் சம்பளம் 100/5/150. 1-வது கிரேட் 150/5/190 எனவும் சம்பளத் திட்டம் ஏற்படுத்தினால் தர்ம நியாயமாகும். இல்லாவிடில் ஏழைக் குமாஸ்தாக்களின் கண்ணீர் வீண் போகாது. கண்ணியமான முறையிலே வேலை நிறுத்தமும் சாத்வீக மறியலும் ஏற்படும் வரை பொறுமையைச் சோதிக்கப் போகிறீர்களா?

ச. இராமசாமி.

தியாகராஜ நகர்.
21—8—46

கல்வி ஆசிரியர் அவர்களுக்கு,

ஆசிரியர்களில் ஆரம்ப ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், எல். டி. ஆசிரியர்கள், காலேஜ் ஆசிரியர்கள் என நான்கு பிரிவுகளே இருப்பதாக நினைத்திருக்கின்றனர். இந்த ஒவ்வொரு பிரிவிலும் வெளியாரேயன்றிச் சகோதர ஆசிரியர்களுங்கூட உணர முடியாதபடி தனிப்பட்ட, ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஓர் இனம் இருப்பதை இவர்கள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. அவ்வொதுக்கப்பட்ட இனத்தின் சேவை எத்தகையது? அது எந்த நிலையில் இருந்து வருகிறது? அவர்கள் தாயாகி இளைஞர்களின் உள்ளத்தைப் பண்படுத்தி, உணர்ச்சியைப் பெருக்கி, அறிவை வளர்த்து, சுதந்திர ஆர்வத்தைக் காப்பிப்பதாகிய சிறப்பு வாய்ந்த தெய்விகமான தாய்மொழியைக் கற்பிக்கும் புனிதமான சேவையைச் செய்து வருகிறவர்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு ஆசிரிய சமூகத்தில் ஒரு ஸ்தானம் இல்லை; அந்தஸ்து இல்லை; மதிப்பு மரியாதைகள் இல்லை.

அவர்களிடமிருந்து மற்றவர்கள் செய்யும் வேலைக்கு அதிகமான வேலையை வாங்கிக் கொள்ளும் அதிகாரிகள் அவர்களை ஆசிரியர் இனத்தைச்சேர்ந்தவர்களாக மதித்து நடத்த மறுத்து நிற்கிறார்கள். சென்னை போன்ற நகரங்களிலும் இருபதும் இருபத்தைந்தும் ஊதியம் வழங்கி அவர்களைப் பல வகையிலும் அவமதித்து அவமானப்படுத்தி வருகிறார்கள். இதைப் பற்றிக் கேள்வி முறையே இல்லை.

இதுவரையில் எவரும் இந்த உண்மையை உணர்ந்து எடுத்துக்கூற முன் வராதது வியப்பாகவே இருக்கிறது. பிறரைச் சொல்லுவானேன்! தமிழாசிரியர்களையும் அங்கத்தினர்களாக ஏற்றுக் கொண்டுள்ள சென்னை ஆசிரியர் சங்கம், தென்னிந்திய ஆசிரியர் சங்கம் ஆகியவையே இதனைப் புறக்கணித்திருக்கின்றன. அங்கத்தினர்கள் வற்புறுத்தியும் அவை இதனை ஏற்றுக் கொள்ளாமல், எல். டி. ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஆகிய இரு கூட்டத்தாருக்கே பயனளிக்கக் கூடிய கோரிக்கைகளை வற்புறுத்தி வருகின்றன.

மாகாணத்தில் நம் அரசாங்கம் நடைபெறுகிறதே. நம்மவர் தாய்மொழி ஆக்கத்தில் நோக்கமுள்ள நம் தமிழ்மகனார் கல்வி மந்திரியாக இருக்கின்றாரே. அவராவது இதனைக் கவனித்தாரா? தாய்மொழியை முதல் மொழி என்று அரசாங்க ஏட்டில் எழுதிவிட்டால் அதற்கு முதன்மை வந்துவிடுமா? தாய்மொழி ஆசிரியர்களின் நிலை உயர்த்தப் பட்டாலன்றி, அவர்கள் ஆங்கில ஆசிரியர்களோடு சம அந்தஸ்தாவது வழங்கப்பட்டாலன்றி, தாய்மொழி எப்படி முதன்மை ஸ்தானம் அடைய முடியும்? ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் தாய்மொழி ஆசிரியர்களுக்கு மற்ற மொழி ஆசிரியர்களோடு சம அந்தஸ்தும் சம ஊதியமும் அளிக்காமலிருக்கையில் பொதுவாக ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவது என்பது உண்மையில் எப்படி முடியும்?

ஆசிரியர்களின் க்ஷேமத்திலும், தாய்மொழியின் வளர்ச்சியில் கருத்துள்ள பெருமக்கள் இனியாவது இவ்வுண்மையை உணர்ந்து முதலில் தாய்மொழி ஆசிரியர்களின் நிலையை உயர்த்த முயலுவார்களா? இப்பொழுதாவது தமிழாசிரியர்கள் விழித்தெழுந்து ஒன்று சேர்ந்து தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் முகத்தான் தமிழ்த்தாயின் மானத்தைக் காப்பாற்ற முன்வருவார்களா?

தங்கள்,
ம. வி. ராகவன்

தமிழாசிரியர், ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்
உயர்கலாசாலை, தி. நகர்.

மயிலாப்பூர், சென்னை
20—8—46

ஆசிரியர் அவர்கட்கு,

சென்ற வாரக் "கல்கி"யில் நான் கண்ட ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அதாவது, உமையாள்புரம் சுவாமிநாதய்யரின் பிள்ளைப் பற்றி எழுதுகையில் மகாராஜபுரம் விசுவநாதய்யர், மகா வைத்தியநாதய்யர் முதலிய பெயர்களைக் கொட்டை எழுத்துக்களில் அச்சடித்தும் பிரதானியம் அளித்திருக்கிறீர்கள். ஆனால் முக்கியமாக நீங்கள் குறிக்க வேண்டிய பிரதான "உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யர்" என்னும் பெயர் சிறிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டுக் கண்களுக்குச் சிறிது சிரமம் கொடுக்கிறது. அப்படித் தாங்கள் அச்சடித்திருப்பதால் மகாராஜபுரம் விசுவநாதய்யரிலும் தான் உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யருக்குப் புகழ் ஏற்பட்டது என்று ஏனையோர் எண்ண இடமிருக்கின்றது. ஆனால் உண்மையில் பட்டம் பதவி பெறுவதற்காக தம் வாழ்நாளை வீணாக்காத மேற்படி மகான். ஆதியில் "பல்லவி ஸ்வாமிநாதய்யர்" எனப் பிரசித்தி யடைந்தவர் மகா வைத்தியநாதய்யரின் நேர் சிஷ்யர்களுள் ஆசாரத்துடன் சங்கீத சம்பத்தைப் போற்றி வந்தவர். ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் மற்றும் இளம் வித்வான்கள் பலரும் மேற்படியாரிடம் சங்கீதம் பயின்றவர்களே. இதுவரை "கல்கி"யை ஊக்கமாகப் படித்துவந்து இப்பொழுது முதல் தடவையாகக் குற்றம் கண்டுபிடிப்பதும் எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. தயவுசெய்து இனி இவ்வண்ணம் நேராமல் பார்த்துக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன். இடமிருந்தால், இக்கடிதத்தைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கவும்.

இப்படிக்கு,
வி. பாலசுப்பிரமணியம்.

[ஒரு தடவைக்கு மூன்று தடவை பெரிய எழுத்தில் போட்டு விட்டோம். தங்கள் வருத்தம் நீங்கியிருக்குமென்று நம்புகிறோம்.
—ஆசிரியர்.]

ஐந்து ரூபாய் பரிசு: இந்த வார இதழில் 35-ம் பக்கத்தில் வெளியாகியிருக்கும் நற்கால ஜாதகம் ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

152. எழுந்தது அழுகுரல்!

இலங்கைக் கோட்டையின் வடக்கு வாசலில் வந்து சேர்ந்தாள் சூர்ப்பனகை. மூக்கு, காது அறுபட்டு அலங்கோலமாய் வந்ததைப் பார்த்த அரக்க வீரர்களுக்கு ஒரே திகைப்பாய்ப் போய் விட்டது. இந்தக் காரியத்தைச் செய்ய யாருக்குத் துணிவு வரும்! மும்மூர்த்திகள்தான் இந்தக் காரியத்தைச் செய்தார்களோ?— என்றெல்லாம் பேசினார்கள்.

கடைசியாகச் சிலர், சூர்ப்பனகையே தன் மூக்கை அறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற விதமாகப் பேசினதையும் பார்த்தோம்.

• • •

யாரோ ஒருவன் ராவணன் தங்கையை அங்கஹீனப்படுத்தி விட்டான் என்ற செய்தி நகர் எங்கும் பரவி விட்டது.

ஆடலும் பாடலுமாய் ஒரே முழக்கத்தில் இருப்பது இலங்கை. இப்போது அதன் நிலைமை எப்படி இருக்கிறது பாருங்கள்!

முழவினில், வீணையின்,
முரளி யாழினில்,
தழுவிய குழலினில்,
சங்கின் தாரையில்,—
எழுகுரல் இன்றியே,—
என்றும் இல்லதோர்
அழுகுரல் பிறந்த(து)அவ்
இலங்கைக்(கு) அன்றரோ!

[முழவினில்: நடனத்துக்கு உரிய மத்தளத்தில்; முரளி யாழினில்: முரளியாழ் என்னும் வாத்தியத்தில்; தழுவிய குழலினில்: தவில் முதலிய பக்க வாத்தியங்களோடு ஒத்து ஒலிக்கும் நாதசுரத்தில்; தாரையில்: எக்காளத்தில் — இவைகளிலிருந்தெல்லாம்; எழுகுரல் இன்றியே: எழும் சப்தமில்லாமல்; அன்று அரோ - அன்று, அடடா!]

பல வகையான வாத்தியங்களிலிருந்து எழும் இனிய சங்கீதத்தை யல்லாமல் வேறுவித ஓசையைக் கேட்டறியாத இலங்கைமா நகரில் முதன் முதலாக அன்றைக்கு அழு குரல் கேட்டதாம்!

அழகிய பெண்கள் கைகளை நெரித்துக் கொண்டு ஒன்றும் விளங்காமல் ஒரே பார்வையாய்ப் பார்த்தார்கள். பேச இயலவில்லை. நிறைந்து கட்டிப்பட்ட பால் ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்துக்குள் விடும்போது, அது எப்படி தயங்கித் தயங்கி விழுமோ, அது போல பெண்களது வார்த்தைகள் திக்கித் திக்கி வெளி வருகின்றன. அவ்வளவு கவலைக்கு உள்ளாகி விட்டார்கள் அவர்கள்!

கரை அறு திருநகர்க்
கருங்கண் நங்கைமார்,
நிரைவளைத் தளிர்க்கைகள்
நெரித்து நோக்கினர்;
பிரையுறு பால்என
நிலையில் பின்றிய
உரையினர், ஒருவர்முன்
ஒருவர் ஓடினர்.

[கரை அறு திருநகர்: எல்லை இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு விசாலமான இலங்கை; கருங்கண் நங்கைமார்: அழகிய கரிய கண்களுடைய பெண்கள்; பிரையுறு பால் என: நிறைந்து கட்டிப்பட்ட பால் போல; நிலையில் பின்றிய உரையினர்: ஒழுங்கை விட்டு மாறிய சொல்லினராய்; ஒருவர் முன் ஒருவர் ஓடினர்: சூர்ப்பனகை வந்த கோலத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு ஓடின மாதிரி ஓடினார்கள்.]

நாயகர்களோடு உல்லாசமாய் தோகைத் தழுவிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள் சில பெண்கள். சூர்ப்பனகைக்கு நேர்ந்த விபத்தைக் கேட்ட மாத்திரத்தில் நாயகர்களை தோளை விட்டு அப்படியே நழுவி விழுந்து விட்டது கை. இரு கண்களிலிருந்தும் கண்ணீர் குபுகுபு என்று சொட்ட ஆரம்பித்தது.

எழுஎன மலைஎன
எழுந்த தோள்களைத்
தழுவிய வளைத்தளிர்
தெகிழுத், தாமரை
முழுமுகத்(து) இருகயல்
முகத்தின் ஆலிகள்
பொழிதரச், சிலருளர்
பொருமி விம்முவார்

[ஏறுஎன மலைஎன எழுந்த தோள்களை : ஏறுபோலும் மலைபோலும் எழுந்த நாயகரது தோள்களை ; தழுவிய வளைதளிர் நெகிழ : தழுவி நின்ற வளையணிந்த தளிர்போன்ற கை நெகிழ்ந்து கீழே விழ : தாமரை முழு முகத்து : தாமரை போன்ற பூரண அழகு வாய்ந்த முகத்தில் : இருகயல் முகத்தின் ஆலிகள் பொழிதர : இரு கயல் போன்ற கண்களிலிருந்து முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள் உதிர : சிலர் உளர் பொருமி விம்மு வார் : சில பெண்கள் நிற்கிறார்கள், அவர்கள் பொருமிப் பொருமி விம்முகிறார்கள்.]

காதலர்களோடு உல்லாசமா யிருந்த காதலிகளின் நிலைமை இப்படி ஆயிற்று.

வேறு சிலர், காதலர்களோடு கோபங் கொண்டவர்களாய், தண்டனையாக அவர் களைத் தூரத்தில் நிற்கச் செய்து, ஒரே கொதிப்புடைய மனத்தினராய், ஊடல் அளவுக்கு மிஞ்சிப் போய்க் கண்கள் ஒரே சிவப்பாய்ச் சிவந்து ஆங்கார சொரூபத்தில் நிற்கிறார்கள்.

இந்த நிலையில் சூர்ப்பனகைக்கு வந்து சேர்ந்த அவமானத்தைக் கேட்டார்கள்.

நாந்தக உழவரை
  நாட்டும் தண்டத்தர்,
காந்திய மனத்தினர்,
  புலவி கைம்மிகச்
சேந்தகண், அதிகமும்
  சிவந்து நீர்உக,
வேந்தனுக்(கு) இனியவள்
  தாளின் வீழ்ந்தனர்.

[நாந்தக உழவரை : வாள் ஒன்று கொண்டு பகைவர் சேனையை உழவல்ல நாயகர்களை ; நாட்டும் தண்டத்தர் : அப்படியே விலகி நிற்கும்படி தண்டிக்க வல்லவர்கள் ; காந்திய மனத்தினர் : ஒரே கொதிப்பாய்க் கொதிக்கும் மனத்தினர் ; புலவி கைம்மிக : ஊடல் அளவுக்கு மிஞ்சிப் போகவும் ; சேந்த கண் : சிவந்து போன கண்கள் : அதிகமும் சிவந்து நீர் உக : அப்படியே அதிகமாகச் சிவந்து கண்ணீர் பொழிய : வேந்தனுக்கு இனியவள் தாளின் வீழ்ந்தனர் : ராவணனுக்குத் தங்கை யான சூர்ப்பனகை காலில் போய் விழுந் தார்கள் ;]

சில பெண்கள் மதுபானத்தில் திளைத்த வராய் நாயகரோடு இருக்கிறார்கள். அதை யெல்லாம் அப்படியே விட்டுவிட்டு, ஓடி வந்து சூர்ப்பனகையைத் தழுவிக் கொண் டவர்களாய் நடக்கிறார்கள். சூர்ப்பனகை யிடம் அவ்வளவு மதிப்பும் அனுதாபமும்.

கள்ளுடை வள்ளமும்
  களித்த தும்பியும்
உள்ளமும் ஒருவழிக்
  கிடக்க,—ஓடினர்,—
வெள்ளமும் நாணுற
  விரிந்த கண்ணினர்,—
தன்னுறு மருங்கினர்
  தழீஇக்கொண் டேகினர்.

[கள்ளுடை வள்ளமும் : கள் நிறைந்த கிண்ணமும் ; களித்த தும்பியும் : கள்ளை அருந்தி அங்கே சுற்றி வந்த வண்டுகளும்; உள்ளமும் ஒருவழி கிடக்க : காதல் வெறியில் நின்ற உள்ளமும் அப்படியே அங்கு கிடக்க,— அவைகளை ஒழித்து விட்டவராய் ; ஓடினர் : சூர்ப்பனகைச் செய்தி கேட்டு ஒரே ஓட்டமாய் ஓடி ; வெள்ளமும் நாணுற விரிந்த கண்ணி னர் : தடாகங்களும் நாணும்படியாக அவ் வளவு விரிந்த கண்ணையுடைய அரக்கப் பெண்கள் ; தன் உறு மருங்கினர் : இடை தள்ளாட ; தழீஇக்கொண்டு ஏகினர் : சூர்ப்ப னகையைப் பக்கத்தில் வந்து தழுவிக் கொண் டவர்களாய் நடந்து செல்லுகிறார்கள்.]

மேலேயுள்ள ஐந்து பாடல்களிலும் அரக்கியர்களுடைய உல்லாச வெறி கொண்ட வாழ்க்கை தெரிகிறது. சூர்ப்ப னகைக்கு நேர்ந்த அவமானத்தை அவர்க ளால் தாங்க முடியவில்லை என்பதும் தெரி கிறது. செய்யுள்கள் அருமையான பாவங்க ளோடு தெளிவு பெற்று நிற்கின்றன.

ஏன் இந்த ஸ்ட்ரைக்குகள்?

"ரவாவாக்கியர்"

ரயிலுவேலைக் காரனின்று ரகளைசெய்வ தேனடா?
மெயிலுதூக்கும் 'ரன்னர்'வேலை மறுத்துநின்ற தேனடா?
'பைலை'ப்பார்க்கும் குமஸ்தாகூட பயமுறுத்துவ தேனடா?
ஜெயிலுசென்ற தியாகி சம்பளம் ஜாஸ்திபண்ணிய தாலடா!

"சாத்து,வொர்க்கு ஷாப்பை!"என்று சண்டையாவ தேனடா?
நூத்திநாற்பத்தி ஹலாம்செக்ஷன் நுழைந்திருப்ப தேனடா?
வாத்தியார்கள் கூட்டம்கூடி வலமும்வந்த தேனடா?
கீர்த்திபெற்ற பெரியோர் சம்பளம் கூட்டிக்கொண்ட தாலடா!

பாட்டிமார்கள் "பாவி!"என்று பட்டம்தருவ தேனடா?
வீட்டிலரிசி ரேஷன்குறைந்து விசனம்பொங்குவ தேனடா?
தோட்டிசம்பளம் கேட்டுமுகத்தைத் தொங்கவிடுவ தேனடா?
நாட்டுமந்திரி சம்பளம் தூக்கிப் போட்டுக்கொண்ட தாலடா!

எழும்பியிருக்கும் ஸ்ட்ரைக்குகள் இனிஎழும்பப்போகும் ஸ்ட்ரைக்குகள்
கிளப்புக்காரர் ஸ்ட்ரைக்குகள் இனிகிளம்பப்போகும் ஸ்ட்ரைக்குகள்
மழுப்பிவிட்ட பேச்சுகள் ஏமாற்றவார்த்தை வீச்சுகள்!
விழிப்படைந்த மக்களிடத்தில் வெல்லுமோஇவர் சூழ்ச்சிகள்?

காலக்ஷேபம்

நீதிபதி:—இந்தத் திருட்டை நீ ஒருவன் மட்டும்தானே செய்தாய்?

திருடன்:—ஆமாங்க; இந்தக் காலத்தில் வேறு யாரையும் நம்ப முடிகிறதில்லைங்க!

★

பருத்த மனிதர்:—என் தம்பி, என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

பையன்:—தங்களை மீறி வேறு எங்கே யாவது பார்க்க முடிந்தால்தானே, ஐயா!

★

ஒருவர் தம் மனைவிக்குத் தொண்டையில் ஏதோ வலி என்று டாக்டரிடம் அழைத்துச் சென்றார். அந்த அம்மாளைப் பரிசோதித்த டாக்டர், "தொண்டையில் கட்டியல்லவா வளர்ந்திருக்கிறது! இன்ன வயதிலேயே எடுத்திருக்க வேண்டுமே!" என்றார்.

ஆபரேஷன் நடந்து, டாக்டரின் 'பில்' வந்து சேர்ந்தது.

டாக்டர் 'பில்'லை அந்த மனிதர் தம்முடைய மாமனாருக்கு அனுப்பிவைத்தார்!

★

"உன் மாமியாருக்கு எதற்காக வீணாகப் பணத்தைச் செலவழித்து வைத்தியம் செய்கிறாய்? உனக்குத்தான் அவளைக் கண்டால் கட்டோடு பிடிக்காதே?"

"ஆமாம், பிடிக்காதுதான்! இருந்தாலும் அவளுக்குச் சாத்துக்கொடியும் ஆரஞ்சுப் பழமும் வாங்கிக் கொடுத்துக் கட்டுப்படி ஆகவில்லை. அதனால்தான் சீக்கிரம் வியாதியைக் குணப்படுத்தி விடலாமென்று அவசரமாய் வைத்தியம் செய்து வருகிறேன்!"

★ திருச்சி நேஷனல் ஹைஸ்கூலின் ஆரம்ப காலம் பற்றிய கட்டுரையைச் சென்ற இதழில் நேயர்கள் படித்திருப்பார்கள். மேற்படி ஹைஸ்கூல் வளர்ச்சி பெற்றுக் காலேஜ் ஆனது பற்றிய ரஸமான விவரங்களை கீழே காணலாம்.

அறுபது வருஷத்துப் பயிர்

ஸ்ரீதரம் குருஸ்வாமி

நேஷனல் ஹைஸ்கூல் ஸ்தாபகர்களின் மனதில் ஒரே ஒரு குறை இருந்தது. அந்த ஸ்தாபனத்தில் ஸ்கூல் பைனல் வரையில் மாணவர்கள் படிக்கிறார்கள்; ஆனால் அதன் பிற்பாடு மேல் படிப்புக்கு அவர்களை வெளியிடங்களுக்குத்தானே அனுப்பவேண்டியிருக்கிறது என்று அவர்கள் வருந்தினார்கள். அதற்கும் வழி பிறந்தது.

1919-ம் வருஷம் சர்வ கலாசாலையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ டி. வி. சேஷகிரி ஐயர் அவர்களின் உதவியை ஹெட்மாஸ்டர் சேஷய்யங்கார் நாடினார். அவர்கள் இருவரும் பால்ய சிநேகிதர்கள். திருச்சி ஜில்லாவின் முடிசூடா மன்னராக விளங்கிய ஸர் டி. தேசிகாச்சாரியார் அவர்கள் ஹைஸ்கூல் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும் ஸ்ரீ டி. வி. சேஷகிரி ஐயர் அதன் தலைவராகவும் விளங்கிய மேற்படி வருஷத்திலேயே ஹைஸ்கூல் காலேஜாக ஆயிற்று.

செகண்ட் கிரேட் கலாசாலையாக, அதாவது இண்டர்மீடியட் வகுப்புக்கள் மாத்திரம் கொண்டதாக ஆரம்பமாயிற்று நேஷனல் காலேஜ். கணிதமோ விஞ்ஞானமோ உடனே ஆரம்பிக்க வசதியில்லாமல் சரித்திரப் பாடம் எடுத்துக் கொள்ளும் மாணவர்கள் மாத்திரமே அப்போது அதில் சேரக் கூடியதாயிருந்தது. அப்படியிருந்தும் ஜூனியர் வகுப்பில் 85 மாணவர்கள் உடனே சேர்ந்தார்கள்.

படித்தால் திருச்சி நேஷனல் ஹைஸ்கூலில் படிக்கவேண்டும் என்று தமிழ்நாடு முழுவதிலுமிருந்து மாணவர்கள் எத்தனையோ ஆவலோடு வருவதுண்டு. காலேஜாக மாறியதும் மாணவர்களின் உற்சாகத்திற்குக் கேட்க வேண்டுமா? ஆரம்பத்திலேயே ஸீனியர் வகுப்பும் துவக்க வேண்டும் என்று மனுக்கள் வந்து குவிந்தன.

1924-ல் பி. ஏ வகுப்பு ஆரம்பமாயிற்று பிறகு, இண்டர்மீடியட் வகுப்பிற்குக் கணிதமும் விஞ்ஞானமும் போதிக்க ஏற்பாடாயிற்று. இப்போது பி. ஏ. வகுப்புகளில் விஞ்ஞானம் தவிர மற்றெல்லாப் பாடங்களும் (கணிதம், சரித்திரம், பொருளாதாரம், தத்துவ சாஸ்திரம் முதலியன) சொல்லித் தருகிறார்கள்.

இன்று காலேஜிலுள்ள இண்டர்மீடியட் வகுப்புக்களில் 700 மாணவர்களும், பி. ஏ வகுப்புக்களில் 150 மாணவர்களும் படிக்கிறார்கள். ஹைஸ்கூல், கிளை ஸ்கூல் எல்லாவற்றிலுமாக மொத்தம் 2500 மாணவர்கள் மேற்படி ஸ்தாபனத்தில் கல்வி கற்கும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள்.

நாம் நட்டு வைத்த மரம் தழைத்துப் பரவிப் பலன் தருவதைச் சேஷய்யங்கார் பார்த்தார். அவர் மனம் குளிர்ந்தது. தாம் ஹெட்மாஸ்டர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளப் போவதாகத் தெரிவித்தார்.

"மேற்கொண்டு ஜீவனத்திற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று நிர்வாகிகள் கேட்டார்கள். "மாதம் 50 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுங்கள்; என் காலம் ஓடிவிடுகிறது" என்றார் அவர் பதிலுக்கு. அவருக்கும் அவருடைய சகாவான ஸ்ரீ பி. ஜி. சுந்தரேச சாஸ்திரிகள் அவர்களுக்கும் மாதா மாதம் தனித் தனியாக ரூ. 100 உபகாரச் சம்பளம் கொடுப்பதென நிர்வாக சபை ஏகமனதாகத் தீர்மானித்தது.

பள்ளிக்கூடம் அவருடைய சொந்தக் குழந்தையைவிடப் பிரியமானதாக இருந்தது அவருக்கு. அதைவிடவும் மேலானதாக ஸ்ரீ சேஷய்யங்கார் எண்ணியது ஒன்று உண்டு. அது ஈசுவரின் சேவை. கால் ந... காரியமாக இருந்தவரை சேஷய்யங்கார் அவர்கள் தம்முடைய நீண்ட வாழ்நாளி...

களை நேரில் சென்று தரிசிக்க ஒரு நாள் டத் தவறிய தில்லை. இரவு நாமே ந்து சென்று ரங்கனைச் சேவித்துத் ரும்பி வந்து சாப்பிட்டால்தான் அவர் ரம் நிம்மதி அடையும்.

என்றைக்காவது ஒரு நாள் ஐந்து நிமி ஷ தாமதம் ஆனால் "ஹெட் மாஸ்டர் ரனும் வரவில்லை, தவா வாட்டும்" என்று டாச்சாரியார் காத்துக்கொண்டிருப்பார். ட் மாஸ்டரும் எப்படியாவது வந்து விடு ர். அப்புறம்தான் சந்நிதியைச் சாத் பூட்டுவார்கள்.

சேஷய்யங்காருக்கு மேன்மையான ஆத்ம த்தைக் குறைவில்லாமல் அளித்து வந்த ரங்கநாதர், அவருடைய 82-வது வய , 1937-ம் வருஷம் ஜூலை மாதம் 19உ, து பொன்னடிகளில் அவரைச் ர்த்துக் கொண்டார்.

இந்த ஜூலை மாதம் 19-ந் தேதியும், னல் பெத்தாசி செட்டியாரும், ஸர் டி. சிகாச்சாரியாரும் வாழ்க்கையைப் பிரிந்த க்களும், மேற்படி மூவருடைய ஞாப தையும் கௌரவிப்பதற்காகக் கலாசாலை மூன்று நாள் விடுமுறை நாட்களாக த்து வருகின்றன.

வெள்ளி விழா எதுவும் நடக்க வில்லை பதாக மேலே குறிப்பிட் டிருந்தோம் அல்லவா? அப்படிச் சொன்னதை இப்போது வாபஸ் பெற்றுக் கொள்கிறோம். வைர விழாவோடு வெள்ளி விழாவும் இப்போது சேர்ந்து நடக்கிறது. அது எப்படி?

1919-ல் காலேஜ் ஆரம்பித்தபோது கிளாஸ்கள் மற்றச் சங்கடங்களையும் தடங்கல்களையும் ஒரு விதமாகத் தீர்த்துக்கொண்டார்கள்; ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் அவர்களால் செய்யும் வகை தெரியாமல் விழித்தார்கள். பிரின்ஸிபாலாக யாரைப் போடுவது? தமிழ்நாடு முழுவதும் ஆராய்ந்து பார்த்தார்கள்.

கடைசியில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் போசிரியராக அமர்ந்திருந்த ஸ்ரீ கே. ராமானுஜாச்சாரியார் அவர்களை ப்ரஸ்தாப காலேஜின் பிரின்ஸிபால் பதவியை ஒப்புக்கொள்ளும்படி சிவாங்கள் கேட்டுக் கொண்டார்கள். காலேஜுக்கு அதிர்ஷ்டம் இருந்தது. அவரும் ஒப்புக் கொண்டார். ப்ரைமரி வகுப்பிலிருந்து பி. ஏ. வகுப்பு வரை எந்த வகுப்புக்கும் எந்தப் பாடத்தையும் எந்த நேரத்திலும் அமோகமாகச் சொல்லித் தரக்கூடிய அவருடைய அபார சாமர்த்தியத்தைப் பற்றி விஸ்தரிக்கப் பத்திரிகையில் இடமிராது. அவருடைய நிர்வாகத் திறமை, உதார குணம் முதலியவற்றைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம்.



"தட்டினால் வெண்கலம் போல் சத்தம் கேட்கும்" படியாக ஸ்ரீ சேஷய்யங்கார் கட்டிய கலைக்கோவிலின் கட்டிடம்.

ஆனால் தேசியக்கல்லூரியில் அவர்செய்தசேவைகளுக்குள்ளே மிகவும் முக்கியமான தொன்றைப்பற்றி மட்டும் சொல்லத்தான் வேண்டும்.

பச்சையப்பன் கல்லூரியிலிருந்து ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் வந்தபோது, தம்முடனே ஒரு விலையில்லா மாணிக்கத்தையும் அவர் கொண்டுவந்தார். இங்கிலீஷ் புலமையில் இங்கிலீஷ்காரரையும் மிஞ்சும்படியான மேதை ஸ்ரீ சாரநாத ஐயங்காருக்கு உண்டு. காலேஜ் ஆரம்பித்தபோது அதில் பேராசிரியர்களாக வந்து அமர்ந்தவர்களில் இருவர் அந்தக் காலேஜின் இருபத்தெட்டாவது வயதாகிய இந்த வருஷம் வரை அங்கே இடைவிடாத தொண்டு செய்து வந்திருக்கிறார்கள். ஒருவர் ஸ்ரீ வி. சாரநாத ஐயங்கார். மற்றவர் ஸ்ரீ எ. ராம ஐயர். இவர்களிருவர்களைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் சென்னை மாகாணத்தில் இல்லை. காலேஜ் படிப்புக்குச் சம்பந்தம் இல்லாத வெகு தூரத்திலுள்ள கிராமங்களிலேகூடத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஜனங்கள் இப் பெரியோர்களின் அறிவாற்றலையும் பாஷா ஞானத்தையும் தேச பக்தியையும் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொள்வார்கள்.



ஸ்ரீ எ. ராம ஐயர், (கலாசாலை ஆரம்பத்திலிருந்து ஆங்கிலப் பேராசிரியர்: தற்போது வைஸ் பிரின்ஸிபால்: காந்தி பக்தர்: ஹிந்தி பாஷையில் சிறந்த புலவர்.)

இன்றுவரையில் அ
கீர்த்தி வளர்த்து
இருக்கிறது.

பாதிரிமார்களைப்
றிச் சொல்லும் போ
"அவர்களுக் கென்
பெண்டாட்டியா,
ளையா? உழைப்பது
என்ன வந்தி
றது?" என்று
பார்கள். அந்த விஷ
தில் ஸ்ரீ சாரந
ஐயங்காரும், அ
முன்பு சொல்லி வந்
போல, ஒரு 'ஹி
பாதிரி'யே ஆ
காலேஜை அவ
கண்ணுங் கருத்துமா
போற்றி வளர்த்
வந்திருக்கிற
1921-ம் வருஷம் மு
காலேஜின் வளர்
கெல்லாம் அவரே முக்கிய பொறுப்ப
நடுவில் சில வருஷங்கள் காலேஜுக்
வரும்படி குறைந்து நெருக்கடி நே
காலத்திலெல்லாம் மாதா மாதம்
சம்பளமாகப் பெறும் தொகையை
அதிகமாகவே முன்பு தாம் சேமித்து வ
இருந்த தொகையிலிருந்து காலேஜுக்
கொடுத்து உதவினர். அவர் அந்த
தியாகியா யிருந்திரா விட்டால் மற்ற
தனையோ காலேஜுகளுக்கு நேர்ந்த
நேஷனல் காலேஜுக்கும் நேர்ந்திருக்கு

இங்கிலீஷ் பாஷைப் புலமையில் ஸ்ரீ
ரநாத ஐயங்காருக்குச் சமதையான திற
உள்ளவர்கள் இரண்டொருவர் தமிழ்
டில் இருக்கலாம். ஆனால் ஒரு கவி
இருதயத்திலுள்ளே மாணவனை அழைத்
கொண்டு சென்று, அந்தக் கவியின்
களைக் கொண்டே அவனுடைய இருதயத்
மாணவன் ரஸிக்கும்படியாகச் செய்
வல்லமையில் அவருக்கு அவரே இணை.

* * *

கலாசாலைக்கு வரும்போதே ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் மிகவும் வயது முதிர்ந்தவர். ஆகையால் 1921-ம் வருஷத்தில் அவர் ஓய்வு எடுத்துக் கொண்டார். அன்று முதல் அந்தப் பதவியைத் திறமையுடன் பார்த்து வருபவர் ஸ்ரீ சாரநாத ஐயங்கார் அவர்களே. ஆகவே, பிரின்ஸிபால் பதவியில் இருபத்தைந்து வருஷம் முடியாக் கீர்த்தியுடன் விளங்கிய ஒருவருக்கு வெள்ளி விழா நடக்கும் சந்தர்ப்பமும் அல்லவா இப்போது சேர்ந்து கொண்டிருக்கிறது!

ஸ்ரீ சாரநாதய்யங்கார் பேராசிரியர் வாழ்க்கை தொடங்கியபோது திருநெல்வேலி ஹிந்து காலேஜில் பெயர் பெற்ற 'பஞ்சரத்தினங்'களில் ஒருவராக அவர் விளங்கினர்.

அகடெமிக் கௌன்ஸிலால் தேர்ந்தெ
கப்பட்டுச் சென்னை சர்வ கலாசா
நிர்வாக சபையான ஸிண்டிகேட்டில் அங்
கினராகப் பல வருஷம் ஸ்ரீ சார
ஐயங்கார் அமர்ந்திருந்து தமது அரிய
வாக்கை நேஷனல் காலேஜின் வளர்
காகப் பயன்படுத்தினர்.

சென்னைச் சர்வ கலாசாலையில் சே
துள்ள காலேஜுகளுக்குள்ளே இந்தி

ல் நடத்தப்படும் ஸ்தாபனங்களில் திருச்சி
தனல் காலேஜே தலை சிறந்தது என்
சர்வகலாசாலை அதிகாரிகளின் ஒரு
மான தீர்மானம். இந்தக் காலேஜைச்
ந்த பேராசிரியர்களின் கீர்த்தியும் இங்
ள புத்தகசாலை விஞ்ஞான ஆராய்ச்சிக்
க்கள் இவற்றின் கீர்த்தியும் தென்னாடு
வதிலும் பிரசித்தியானவை.

* * *

இத்தகைய புகழ்பெற்ற தேசியக் கல்வி
பனம் இந்த வருஷத்தில் அறுபது
தைப் பூர்த்தி செய்திருக்கிறது. அது
ர்த்தமான கொண்டாட்டங்கள் சிக்கிரத்
நடைபெற வேண்டும். இந்தச் சந்தர்ப்
தில் காலேஜின் தற்போதைய நிலைமை
ன வென்பதைச் சற்றுப் பார்க்கலாம்.

லேஜில் மாணவர்களின் எண்ணிக்கை
துகிக் கொண்டு வருகிறது.

ஹாஸ்டலிலோ இடம் போதவில்லை.
ியூர் மாணவர்கள் 500 பேரேனும்
க்கூடிய ஹாஸ்டல் வேண்டும். இன்
பரந்த விசாலமான விளையாட்டு
ங்கள் அவசியம். காலேஜின் வளர்ச்சிக்
தக்கபடி புத்தகசாலையையும் விஞ்
ன லாபரட்டரிகளையும் குறைந்த பட்சம்
மடங்கு விஸ்தாரப் படுத்த வேண்டும்.

க்கே படிக்க விருப்பமுள்ள மாணவர்
க்கு அவர்கள் விரும்பும் பாடங்களை
லாம் சொல்லிக் கொடுக்க இன்னும்
இல்லை. இண்டர்மீடியட் வகுப்புக்
ல் இயற்கை விஞ்
ம். பௌதிகம்,
பனம் போதிக்க
ன். வி. வகுப்
ள், வர்த்தக நூல்
பிக்க பி. காம்.
புக்கள், வித்து
களுக்கு பி. ஒ.
வகுப்பு, உயர்தரக்
வியை மேலும்
ம்பு கிறவர்களுக்கு
ர்ஸ் பாடங்கள்
ல எல்லாம் தேவை
வையே.
ல் படிப்பு விரும்
கிறவர்களுக்குத்
தொழிற் கல்வி
திக்க வசதி வேண்
காட்டின் பொரு

ளாதார முன்னேற்றம் இந்தத் துறையின்
அபிவிருத்தியையே பொறுத்திருக்கிறது
என்பது உலகமறிந்த விஷயம்.

சென்ற பன்னிரண்டு வருஷங்களாக,
அதாவது 1934 முதல் வருஷத் தோறும்
சுமார் பதினைந்து மாணவர்கள் மின்சாரத்
தொழிலில் பயிற்சி பெற்றுக் கண்ணிய
மாக வேலையில் அமர்ந்து வருகிறார்கள்.
இந்தப் பயிற்சிச் சாலை ஸ்ரீ பூனு நடேச
ஐயர் அவர்கள் கொடுத்துதவிய தாராள
நன்கொடையாலும் பிறகு அவர் ஏற்படுத்
திச் சென்ற க்ஷேம நிதியாலும் சாத்திய
மாகி இருக்கிறது.

உறையூரிலுள்ள கிளை ஹைஸ்கூலும் கோட்
டையிலுள்ள ஆரியன் ஸ்கூலும் வாடகைக்
கட்டிடங்களில் நடந்து வருகின்றன.
இதனால் பள்ளிக்கூடங்களின் வருஷாந்தரக்
கணக்கில் பல ஆயிரம் வருஷந்தோறும்
துண்டு விழுந்து கொண்டே வருகிறது.
ஸ்தாபகர் அவர்களின் பெயரைத் தாங்கி,
சேஷய்யங்கார் மெமோரியல் ஹைஸ்கூல்
எனப்படும் கிளைப் பள்ளிக்கூடத்திற்கு
உறையூர் நாச்சியார் கோவிலின் பின்புறம்
ஒரு கட்டிடம் ஆரம்பமாகி விட்டது.
ஐந்து அறைகள் கொண்ட ஒரு
பாகம் பூர்த்தியாகி வருகிறது. முழுவதும்
கட்டி முடிக்கப் பொது ஜனங்களின்
உதவி கிடைத்தால் இரண்டொரு வருஷத்
தில் அந்த ஸ்தாபனம் எல்லா வகையிலும்
தலை சிறந்து விளங்கும்.

கல்வித் திட்டத்திலுள்ள பாடத்தைவிட
அதைப் போதிக்கும் முறைதான் மாணவ
னின் மனதைச் சரிவர
வளர்ப்பதாகும். ஆசிரி
யர்கள் சொல்லித்
தருவதிலிருந்து மாண
வன் தெரிந்து கொள்
வதைவிட ஆசிரியர்க
ளுடைய வாழ்க்கையி
லிருந்து மாணவன்
அதிகம் தெரிந்து
கொள்ளலாம். நேஷ
னல் ஹைஸ்கூல் இவ்
வளவு தூரம் முன்னேறி
வந்திருப்பதற்கு அதில்
இத்தனை காலமாகப்
பணி செய்து வந்திருக்
கும் உத்தம ஆசிரியர்
களின் வாழ்க்கை ஒரு
முக்கிய காரணமாகும்.



ஸ்ரீ பி. எஸ். கணேச சாஸ்திரிகள்
(நேஷனல் காலேஜ் அடிப்படை
ஹைஸ்கூலின் ஹெட்மாஸ்டர்.)

இப்போது வைர விழா சம்பந்தமாக வசூலிக்கப்படும் நிதியானது விழாவைக் கொண்டாடுவதற்காகத்தான் என்று நினைக்க வேண்டாம். குறைந்தது பத்து லட்சமாவது தேவை என்று திட்டம் போட்டிருப்பது தீர்மான — அபிவிருத்தி வேலைக்கே பெரும்பாலும் பயன்படப் போகிறது. சரியான முறையில் நம்முடைய நாட்டிற்கு ஒத்த விதத்தில் நம்முடைய பொது நலத்திற்காகப் படிப்புச் சொல்லித் தரவேண்டும் என்று நம்புகிறவர்கள் எல்லாரும் இன்று முதற்கொண்டு தங்களால் கொடுக்கக்கூடிய தொகை எதையும் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு அவ்வப்போது அனுப்பி வருவது சிறந்த தேசத் தொண்டாகும். அப்படி அனுப்பும் ஒவ்வொரு தம்பிடியும் நாளைய இந்தியா இன்றைவிட ஒருபடி முன்னேற்றமடைந்து சிறந்து சிறக்கவேண்டும் என்ற முயற்சிக்கு உபயோகமாகும் என்று நிச்சயமாய் நம்பலாம். ஸ்ரீ ஆர். சங்கராஜய்யரின் தலைமையில் திறமையாக நடந்து வரும் உறையூர் மிடில் ஹைஸ்கூல் நிலைபெறுவதற்கு மாத்திரமே ஒரு லட்சம் ரூபாய் தேவையாயிருக்கிறது.



ஸ்ரீ ஆர். சங்கராஜய்யர்.
(உறையூரிலுள்ள நேஷனல் காலேஜ் மிடில் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்.)


நேஷனல் காலேஜ் திருச்சி நகரத்தைச் சேர்ந்ததென்றோ, அல்லது திருச்சி ஜில்லாவைத்தான் சேர்ந்ததென்றோ யாருக்கேனும் அபிப்பிராயம் இருக்குமானால் அதை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும். எல்லா ஜில்லாக்களிலிருந்தும் இந்தக் காலேஜுக்கு மாணவர்கள் வந்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாணவர்க் கழகம் என்றும் கோயமுத்தூர் ஜில்லா மாணவர் சங்கம் என்றும் பலதரப்பட்ட சங்கங்கள் திருச்சியில் ஏற்பட்டு வேலை செய்து வந்திருக்கின்றன.

இது மாத்திரம் அல்ல. செப்டம்பர் பரீக்ஷையில் இண்டர்மீடியட் தேறுகிறவர்கள் அடுத்த ஜூன் வரையில் காலத்தை வீணாக்காமல் நவம்பரிலிருந்தே பி. ஏ. வகுப்
பில் சேருவதற்கு வ
உண்டு. அதற்கு B
term வகுப்பு எ
பெயர். 1927 மு
இந்த 'பைடெர்ம்' வகு
நேஷனல் காலே
நடந்து வருகிறது.
போது மலையாளம்,
னடம் போன்ற
தேசங்களிலிருந்
விசேஷமாக ஆந்
ஜில்லாக்களிலிருந்
கூட நூற்றுக் கணக்
மாணவர்கள் வ
இந்தக் காலேஜில் படி
நன்மை அடைந்
கிறார்கள். ஹி
முஸ்லிம், கிறிஸ்
ஆகிய எல்லா
தினருக்கும்
உரிமையுள்ள ஸ்தாபனம். பல வரு
ஷங்களாக இதில் உருது போதிக்கப்படுகி
முஸ்லிம் மாணவர்கள் படிக்கிறார்
கிறிஸ்தவர்களும் படிக்கிறார்கள். ஆ
யால் தென்னாட்டிலுள்ள யாரும்,
பாகத் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொ
வரும், தங்களுக்கு இந்த ஸ்தாபனத்திலு
பாத்தியதையை நிலைநாட்ட நன்கொ
அனுப்பி உதவுதல் அவசியமாகும்.

பொருளுதவி செய்கிறவர்கள் கா
காரியதரிசி அவர்களுக்காவது, தி
திருச்சி பாங்கின் நிர்வாகியும் நேஷ
னல் காலேஜ் வைர விழாக் கமிட்டி காரிய
தரிசிகளுள் ஒருவருமான ஸ்ரீ எஸ் என்.
மணி அவர்களுக்காவது பணமோ செக்
அனுப்பி வைக்கலாம்.

நேஷனல் காலேஜுடன் எந்த வித
மாவது தொடர்பு உடைய நண்பர்கள்
நாட்டிலுள்ள ஒவ்வொரு ஊரிலும், பிஷ
பிருந்து திருவனந்தபுரம் வரையில் ப
இடங்களிலும் இருப்பார்கள். அவர்
கும், அதன் பணியில் சேர்ந்து தொ
விருப்பமுள்ள ஏனையோருக்கும்
நேஷனல் காலேஜின் வைர விழாவா
தேசபக்தியையும் சமூக முன்னேற்ற
யும் அறிவு மேம்பாட்டையும் விளக்க
கும் ஒரு தேசியப் பண்டிகையாகும். அ
பண்டிகையில் அனைவரும் மனமுவந்து
படுவார்கள் என்று நம்புகிறேன்.

★ ★ ★



ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் கஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால், கேசத்துக்குப் பதில் அடித் தலையே புலப்படும்.

எந்த காரணத்தால் உதிர்ந்தாலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தலை இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது.

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி, தென்னிந்திய ரஸாயனசாலை" என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்



கேரளா ஸோப் இன்ஸ்டிடியூட்
கள்ளிக்கோட்டை

அதிக மைல்கள்★

உழைக்கக் கூடிய
ஜயண்ட்
டயர்

டன்லப்



★ அதிக மைல்கள் போகக் கூடியவை—ஏனெனில் ஒவ்வொரு டயரும் மிக உறுதியுள்ள

"ட்யூராகார்டை"

கொண்டு செய்யப்பட்டிருக்கிறது.

DK279TM.

கதாநாயகன்

சசி



பிறருடைய வாழ்க்கையைக் கண் கொத்திப் பாம்புபோல் கவனித்து அவர்களுடைய நடத்தையைத் திருத்தவும், மனத்தை மாற்றவும் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பும் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன் நான் அல்ல. ஏன், சாதாரணமாகப் பிறத்தியாருடைய காரியங்களில் தலையிட்டுப் புத்திமதி சொல்லுவதோ, அல்லது கூட மாட ஒத்தாசை செய்வதோ எனக்குப் பிடிக்காது.

அப்படியிருக்க, விநாயகசுந்தரத்தை மட்டும் நான் சரியான பாதையில் திருப்பி விட முயன்றது விந்தையேயல்லவா?

அவன் ஒரு அப்பாவி; ஸ்திரீ துவேஷி; பிரம்மசரியப் பித்தன்; படித்துப் பட்டம் பெற்றவன். இவ்வளவிற்கும் மேலாகப் புத்திசாலி. அதனால்தான் அவனைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு வயிற்றெரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

பயலின் முகத்திலே அழகும் அறிவும் சுடர் விட்டு ஜொலிக்கும். அந்த அழகு வெள்ளத்தை அள்ளிப் பருக அவனுக்கு ஒரு பெண்ணை முடித்து அவனை ஒரு கதாநாயகனாக்கிப் பார்க்க வேண்டுமென்று என் மனம் துடிதுடித்தது.

அவன் பி. எல். பரீக்ஷைக்கு எழுதிவிட்டு ஊருக்குப் போகிற வழியில் என் வீட்டிற்கு வந்தான். வந்தது முதல் என் ஆசை முளை விட ஆரம்பித்தது.

“அடேய், எனக்கு மட்டும் ஒரு தங்கை இருந்திருந்தால்?” என்று ஏதோ சொல்ல வந்தவன், அத்துடன் நிறுத்திக் கொண்டேன். என் தாயார் எப்படியோ அதைக் கேட்டு விட்டாள். எட்டு வருஷங்களுக்கு முன் எங்களை நிர்க்கதியாய் விட்டு விட்டு, என் தந்தையைத் தேடிப் போய் விட்டவளை நினைத்துக் கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

விநாயகமும் நானும் வெளியே போவதற்குக் கிளம்பினோம். காப்பி கொண்டு வந்த அம்மா, “ஏண்டா, மணி! நம்ம கோதை ஜாதகம் வந்ததே, பார்த்தாயா?” என்று கேட்டதும், நான் இன்னிசையைக் கேட்ட ரஸிகன்போல் ஆனந்தம் கொண்டேன். நல்ல சமயத்தில் நினைவு படுத்தினாள். கோதைதான் விநாயகத்துக்குச் சரியான ஜதி. இவர்களை மணமும் மாலையுமாகச் செய்து விட்டால், ஏழேழு ஜன்மங்களுக்கும் என்னை மறக்க மாட்டார்களல்லவா?

காப்பி குடித்து விட்டுக் கடை வீதிக்குப் போகும் போது, தேவலோகத்திலிருந்து வழி தப்பிய ஒரு கந்தர்வனைக் கை பிடித்து அழைத்துச் செல்லும் பெருமையுடன் நான் பூமியில் கால் பாவாமல் நடந்தேன்! ஜோஸ்யர் வீட்டுக்குள் புகுந்தபோது விநாயகசுந்தரம் சிரித்தான். ஆனாலும், என் மனம் புண்பட வேண்டாம் என்பதற்காக அவன் நடுத்தெருவில் என்னுடன் ஒன்றும் வாதாடாமல் வந்தான்.

ஜோஸ்யரைப் பரிகாசம் பண்ணுவதென்றால் யாருக்குத்தான் உற்சாகம் இருக்காது? ஏதேதோ அவன் பேசிவந்த இடும்புப் பேச்சுக்களையெல்லாம் ஜோஸ்யர் கவனிக்காதவர்போல் இருந்தார். முடிவில் "இந்தக் கலியாணம் நடக்காவிட்டால் என் வலது காதை அறுத்து வைக்கிறேன்!" என்று சொன்னார்.



எனக்குச் சர்வம் தலைக்கேறிற்று. ஒரு சின்னப் பயல் ஆயிரம் பொய்கூடச் சொல்லாமல் ஒரு கலியாணத்தை முடித்து விடப் போகிறேன்; அதிலும் அழகோடு அழகு செய்யப் போகிறேன்! — இப்படியெல்லாம் எண்ணிய நான், என் மன அரங்கிலே அவர்களைத் தம்பதி சமேதராய்ப் பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைந்தேன்.

2

சீதை, காவியம் எழுதுகிற கலைஞன் மாதிரி மகா உற்சாகத்தோடு கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். விநாயகசுந்தரம், "என்னடா?" என்றான். கோதையின் தகப்பனருக்கு ஜாதகப் பொருத்தம் சம்பந்தமாகக் கடிதம் எழுதுவதாகச் சொன்னதும், கடிதத்தின் நீளத்தைப் பார்த்துவிட்டு, "இது என்ன, தொடர் கதையா?" என்று கேட்டான்.

அப்போது வாசலில் வண்டி மாட்டின் சலங்கைச் சத்தம் கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்தேன். மின்னலின் ஒளியைப் போலக் கோதை வந்து இறங்கினாள். கதைகளிலே தொடர்ந்து சம்பவங்கள் நடப்பதையும், வாழ்க்கையில் முன்னுக்குப் பின் முரணாகக் கோவையின்றி சம்பவங்கள் நிகழ்வதையும் கண்டிருக்கிறேன். இதற்கு மாறாக இப்போது வாழ்க்கையில் இப்படி நிகழ்கிறது என்றால்?

"வா, கோதை! உனக்கு நூறு வயசு!" என்றேன்.

"இல்லை, பதினாறு வயசுதான்!" என்று சிரித்தாள்.



வீட்டுக்குள் வந்ததும், மூன்றாம் மனுஷன் இருப்பதைக் கண்டு தலை குனிந்தவள், குனிந்தவள்தான். நேரே விட்டுக்குள் போனவளை நான் கூப்பிட்டு, "உன் அப்பாவிற்குக் கடிதம் எழுதுகிறேன். வேண்டுமானால் நீயே படித்துப் பார்!" என்றேன்.

அவளும் கடிதத்தை வாங்கியதும், "இது என்ன, தொடர் கதையா?" என்று கேட்டாள்!

"இப்படித்தான் விநாயகசுந்தரமும் கேட்டான்!" என்று சொல்லி, நான் அவளைப் பார்த்தேன். அவள் கல்லுப் பிள்ளையார் போல ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். ஒரு வேளை கண்டதும் காதல் என்பது இதுதானோ?

கடிதத்தைப் படித்து முடித்ததும் அவள் என்னைப் பார்த்தாள்; நான் அவளைப் பார்த்தேன்; அவனும் அவளைப் பார்த்தான்.

"ஜாதகம் பொருந்தி விட்டது. முகூர்த்தம் வைக்க வேண்டியதுதான் பாக்கி என்று உன் அப்பாவிற்கு எழுதியிருக்கிறேன் — ஆமாம்; அப்பா சௌக்யம்தானே? அதைக் கேட்க மறந்துவிட்டேனே?"

"அப்பாவிற்கு ஒரு வாரமாக ஜலதோஷம்; இருமல் வேறு. இப்பொழுது எப்படி இருக்கிறதோ? என்னுடைய பெரியம்மா மகள் கல்யாணி இருக்காளே, அவள் பிள்ளைக்கு ஆண்டு நிறைவு. அப்பா என்னை அனுப்பிவைத்தார். போய்விட்டு ஊருக்குப் போகிற பாதையில் தங்களையும் அம்மாவையும் பார்த்துவிட்டுப் போக இறங்கினேன்" என்றாள்.

"உன் ஜாதகம் என்னிடம் வந்தது உனக்குத் தெரியுமா?"

"தெரியாதே!"

"இப்போது ஜாதகனையே பார்த்துக் கொண்டாய். கடிதத்தில் ஜாதகப் பொருத்தம் மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன். மனப் பொருத்தம்......?" என்று இழுத்த வண்ணம் விநாயகத்தைப் பார்த்தேன். அவன் கோதையின் அழகை ஆராய்ந்து கொண்டிருந்தான்! கோதை படித்த பெண்ணாக இருந்தாலும் நாணத்தோடு தலை குனிந்து கொண்டாள். மௌனம்தான் சம்மதத்திற்கு அடையாளம் என்று அறிந்து கடிதத்தை வாங்கினேன்.

கோதை, "இது ஒரு கடிதமல்ல, கதை! அவ்வளவு அழகாக விஸ்தாரமாக ஒவ்வொரு காரியத்தையும் விளக்கி எழுதியிருக்கிறீர்கள். அப்பா சந்தோஷப் படுவார்!' என்றதும், "அப்படியானால் உனக்குச் சந்தோஷம் இல்லையா?" என்றேன்.

அதற்குள் அம்மா வந்து கோதையை அழைத்துப் போய்விட்டாள். கோதையும் நிலத்தை அளப்பவள் போல, ஒய்யாரமாக நடந்துபோய்த் திரும்பிப் பார்த்தாள். விநாயகத்தின் முகத்தில் அசடு தட்டிற்று.



"அடேய், இவளுக்கு நாட்டியம் தெரியுமோ?" என்று கேட்டான் விநாயகம்.

"கொஞ்ச நாள் பாடம் கேட்டாள். பிறகு, அவள் அப்பா நிறுத்தி விட்டார்!" என்றேன்.

"அதுதான் மயிலைப்போல் கர்வமாக நடக்கிறாள்!"


"மேகத்தைக் கண்டால், மயில் நடனம் ஆடத்தானே செய்யும்!" என்றேன் நான்.

விநாயகம் என் முதுகில் விளையாட்டுக்குத் தட்டினான். அவன் மனம் அவ்வளவு சுலபத்தில் மாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அன்று மாலை ஏதாவது ஒரு சினிமா பார்க்க வேண்டுமென்று நானும் விநாயகமும் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தபடி புறப்பட்டோம்.

கடை வீதிக்குப் போகும்போது, அவன் தனக்குத் தலையை வலிப்பதாகச் சொன்னான்.

"ஒரு வேளை அது காதல் ஜுரமோ!" என்று நான் அவனைக் கேலி செய்தேன். சினிமாவுக்குப் போகாமல் தமாஷாகக் கடைவீதி வழியே வீட்டிற்குத் திரும்பினோம். வழியில், கத்தரிக்காய் மலிவாக விற்கவே அதை வாங்க நான் போனேன். திரும்பி வருவதற்குள் நாலு முழம் கதம்பமும், ஒரு அணாவிற்கு மல்லிகைப் பூவும் வாங்கி வைத்திருந்தான் அவன்!

இரண்டு மணி நேரத்துக்குப் பின், மல்லிகையும் கதம்பமும் கோதையின் கூந்தலை அலங்கரித்தன. சாப்பாட்டிற்கு மேலே, வெளி முற்றத்தில் நாங்கள் நால்வரும் உட்கார்ந்திருந்தோம். அம்மா, "கோதை, உன் பாட்டைக் கேட்டு ரொம்ப நாளாகிறதே, பாடு!" என்றாள்.



கோதை பாட ஆரம்பித்தாள். குளிர்ச்சியான பால் நிலவும் மலரின் மணமும் சேர்ந்து, அவள் குரலைப் பன்மடங்கு இனிமையாக்கியது. பாட்டின் சுகத்திலே சொக்கிப் போன விநாயகம் தலை இறங்கிக் கிடந்தான்.

பிறகு, என்னைப் பாடும்படி கோதை சொன்னாள். எனக்கு ஞானம் உண்டே தவிர ராகம், தாளம் கட்டிப் போட்டாலும் வராது. ஆகவே, விநாயகத்தைப் பாடும்படி வற்புறுத்தினேன். கம்பீரமாகப் போட்டி போட்டுக் கொண்டு பாடுபவன் போல் அவன் ஆரம்பித்தான் — வருங்காலத்தில் வக்கீலாகப் போகிறவன் அல்லவா?

நிலவு செய்யு முகமும் — காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும் — தெய்வக்
களிதுலங்கு நகையும்

என்று விநாயகம் பாடிக் கொண்டிருந்த போது நாங்கள் சிரித்தோம்; கோதையும் கலகலவென்று நகைத்தாள்.

என் கனவு நனவாவதைக் கண்டு நான் பூரிப்படைந்தேன்.

இப்படியே ஒரு வார காலம் உல்லாசமாகப் பொழுது போய்க் கொண்டிருந்தது. என் கடிதத்திற்குப் பதில் வரக் காணோம். ஆனால் தந்தி வந்தது. "அப்பா அபாயம். கோதை உடனே வரவும்" என்று படித்ததும் எனக்கு இடி விழுந்தது போல இருந்தது. கோதை என் அம்மாவை அழைத்துக் கொண்டு ரயிலுக்குப் புறப்பட்டாள். நாங்களும் ரயிலடி வரை சென்றோம்.

விநாயகம் டிக்கெட் எடுத்து வந்தபோது, ஆளே உருமாறிப் போய், துணிமணி கிழிந்து வியர்த்து விறுவிறுத்து பைத்தியக்காரனாக வந்து சேர்ந்தான். பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனிடம் மன்னிப்புக் கேட்டாள் கோதை.

"காதல் கொண்டவர் விண்ணையும் மண்ணையும் சாடுவார்கள்! அப்படியிருக்க, டிக்கெட் எடுத்ததற்கு மன்னிப்பா, கோதை? போனவுடன் அப்பாவிடம் கேட்டு,

உடனே எனக்குக் கடிதம் எழுதச் சொல்" என்றேன் நான்.

அம்மாவும் கோதையும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். நாங்கள் ரயிலடியை விட்டுப் பிரிந்தோம்.

3

வீட்டிலே இருட்டும் மௌனமும் குடி கொண்டது. விநாயகம் உற்சாகம் குன்றி ஊருக்குப் புறப்பட ஆத்திரப்பட்டான். நான் வற்புறுத்தியதின் பேரில் இன்னும் இரண்டு நாள் தங்குவதற்குச் சம்மதித்தான்.

மூன்றாம் நாள் காலை, ஓட்டலில் சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண்டே வந்தோம். கோதை என் குடும்பத்திற்கு எப்படிச் சொந்தம் என்று விநாயகம் கேட்டான். "ஒரு காலத்தில் இரு குடும்பத்தாரும் செல்வமாக வாழ்ந்தோம். இப்போது நாங்கள் கெட்டுப்போய் விட்டோம்; அவர்கள் குபேரர்களாக வாழ்கிறார்கள்."— இவ்வளவுதான் நான் சொன்ன விவரம்.

நாங்கள் இருவரும் வீட்டை யடைந்து கதவைத் திறந்தபோது, அங்கே ஒரு கவர் கிடந்தது. ஆவலுடன் பணப் பையைக் கண்டெடுப்பவன் போல அந்தக் கடிதத்தை எடுத்த நான் ஏமாற்றமடைந்தேன். ஏனெனில், நான் மேல் பார்த்து விநாயகசுந்தரத்தினிடம் கொடுக்க வேண்டுமென்பதாக அந்தக் கவரின்மேல் எழுதப் பட்டிருந்தது. என்னை அறியாமலே என் நெஞ்சில் ஏதோ சுருக்கென்றது. "இந்தா விநாயகம், கோதை எழுதியிருக்கிறாள்!" என்றேன்.

"நீதான் பாரேன்!" என்றான் அவன்.

"நான் யாரடா, அதைப் பார்க்க? உன் கோதை உனக்கு எழுதியிருக்கிறாள்!"

"எங்கள் வாழ்க்கைக் கீதத்திற்கு நீ சுருதி கூட்டும் தம்புரா அல்லவா?"

"போதும்; சபையில் தம்புரா இருப்பதை யார் கவனிக்கிறார்கள்? அபஸ்வரம் தட்டினால்தான் தம்புரா இருப்பது தெரியும்!" என்றேன் நான்.

கடிதத்தை விநாயகம் படிக்க ஆரம்பித்ததும் அவன் முகத்திலே சோகமும் துயரமும் படர்ந்தன. ஒருவேளை அவன் தந்தை ...?

"என்ன, என்ன, என்னடா?" என்று பதட்டத்துடன் கேட்டேன். அவன் விக்கி அழுகிற குரலில், "இது நீ படிக்க வேண்டிய கடிதம்" என்றான்.

"ஸ்ரீ விநாயகசுந்தரம் அவர்களுக்கு நமஸ்காரம். என்னை மன்னியுங்கள்; மறந்து விடுங்கள். என் அப்பா சாகுந்தறுவாயில் சொன்னார்:—'அம்மா கோதை, மணிக்கு உன் ஜாதகத்தை அனுப்பியதை அவன் புரிந்து கொள்ளவில்லை. பைத்தியம் மாதிரி அவன் உனக்கு வரன் தேடி ஜாதகப் பொருத்தமும் மனப் பொருத்தமும் இருக்கிறது என்று எழுதி விட்டான். என்னுடைய ஆஸ்திக்கும் செல்வத்திற்கும் காரணம் மணியின் அப்பாதான். அவருடன் கூட்டு வியாபாரம் செய்ததின் கடனை அடைத்து அவர் ஏழையானார். நான் அவரை ஏமாற்றிப் பணக்காரனானேன்! அதற்குப் பிராயச்சித்தமாக அவனை நீ மணக்க வேண்டும். சத்தியம் செய்து கொடு!' என்றார். கொடுத்துவிட்டேன். கோதை."

என் தலை சுற்றியது. விநாயகத்தின் முகத்தைப் பார்க்கப் பார்க்க என் மனம் பட்ட வேதனை சொல்ல முடியாது. இந்தச் சமயத்தில் எங்கள் மௌனத்தைக் கலைக்கத் தந்திச் சேவகன் வந்து சேர்ந்தான்.

"அப்பா காலமானார்; உடனே வரவும்."

என்று என் விலாச மிட்டுத் தந்தி வந்திருந்தது. உடனே நாங்கள் இருவரும் ரயிலடிக்குப் புறப்பட்டோம். இரண்டு டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்தான் விநாயகம்.

ரயில் வந்ததும் நான் ஏறினேன்; அவன் ஏறவில்லை. "நீ வரவில்லையா?" என்றேன்.

"இனி நான் யாரோ, அவன் யாரோ?— இது என்னுடைய ஊருக்கு டிக்கெட்!" என்றான் அவன்.

கொலைக் குற்றம் செய்தவனைப்போல நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.


நல்ல கேள்வி!



"நீ ஏன் முன்பு வேலை செய்து கொண்டிருந்த வீட்டை விட்டுவிட்டு வந்தாய்?"

"போகிற இடத்திற்கெல்லாம் வீட்டைத் தூக்கிக் கொண்டு போக முடியுங்களா, சாமி?"





மந்திரக் குல்லா

என். என்.

அன்று மாலை கிட்டு வழக்கம் போல் தன் வீட்டுக்குப் பின்புறத்திலிருந்த தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று, "ஐயோ, என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்ற குரல் கேட்டது. கிட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்; ஒருவரையும் காணோம்!

"ஐயோ! ஏன் தம்பி, சும்மா நின்று கொண்டிருக்கிறாய்? என்னை உனக்குத் தெரியவில்லையா?" என்று மறுபடியும் அந்தக் குரல் கேட்டது.

கிட்டு மறுபடியும் திரும்பி நன்றாகப் பார்த்தான். ஒரு குள்ளனின் தாடி சப்பாத்திப் புதரில் சிக்கிக்கொண்டிருந்தது. அதிலிருந்து தன் தாடியை விடுவித்துக் கொள்ள முடியாமல் அவன் திணறிக் கொண்டிருந்தான். உடனே கிட்டு ஓடோடியும் சென்று, குள்ளனுடைய தாடியைப் புதரிலிருந்து விடுவித்தான். குள்ளன் மிகவும் சந்தோஷமடைந்து, "நீ ரொம்பவும் நல்ல பையன்! இந்தா, இந்த மந்திரக் குல்லாவை வைத்துக் கொள். இதைத் தலையில் வைத்துக் கொண்டால் நீ யாருடைய கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து விடுவாய்! உன்னை அப்பொழுது யாரும் பார்க்க முடியாது. ஆனால் ஒன்று: இந்தக் குல்லாவைப் போட்டுக் கொண்டு ஏதாவது கெடுதலான காரியம் செய்தால் அதன் சக்தி போய் விடும். பிறகு அது சாதாரணக் குல்லாவாக மாறி விடும்! ஜாக்கிரதை!!" என்று கிட்டுவிடம் ஒரு குல்லாவைக் கொடுத்து விட்டு மறைந்தான்.



கிட்டுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அந்தக் குல்லாவின் சக்தியைப் பரிசோதிக்க வேண்டுமென்று அவனுடைய கை துடித்தது.

அப்போது வழியில் ஒரு குருவி தரையில் ஏதோ பொறுக்கித் தின்று கொண்டிருந்தது. கிட்டு தலையில் குல்லாவைப் போட்டுக் கொண்டு அதனருகில் சென்றான். என்ன ஆச்சரியம்! குருவி பயந்து ஓடவில்லை; அவன் அங்கு வந்ததே தெரியாதது போல் தானியத்தைக் கொத்திக் கொண்டிருந்தது!



கிட்டுவுக்கு மனதிலிருந்த சந்தேகம் போய்விட்டது. "சரி, இது நிஜமாகவே மந்திரக் குல்லாதான்! இனி, எனக்கு என்ன கவலை?" என்று எண்ணிக் குதித்துக் கொண்டே கிட்டு வீட்டுக்கு ஓடி வந்தான்.

வேலைக்காரி பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். கிட்டு குல்லாவைப் போட்டுக் கொண்டு அவளுக்கு முன்னால் சென்று ஒரு பாத்திரத்தைக் காலால் உருட்டி விட்டான். வேலைக்காரி ஆச்சரியத்துடன் நாலா பக்கமும் பார்த்தாள். யாரும் அவள் கண்ணுக்குத் தெரியவில்லை! கிட்டு தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.



இதேமாதிரி அன்றையதினம் கிட்டு பல வேடிக்கைகளைச் செய்து, பொழுதைப் போக்கினான்.

மறுநாள் அவனும் அவனுடைய தகப்பனாரும் ஜவுளிக் கடைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு கிழவி வேர்க் கடலை, பட்டாணி, இலந்தைப் பழம் முதலியவைகளை விற்றுக்கொண்டிருந்தாள். கிட்டுவுக்கு வேர்க் கடலையைப் பார்த்ததும் ஆசை உண்டாயிற்று. அப்பாவைக் கேட்டால், "அதெல்லாம் வேண்டாம்!" என்பார். ஆகையால், என்ன செய்வது என்று யோசித்தான். உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அவன் தன் மந்திரக் குல்லாவை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு கிழவியை நெருங்கி, ஒரு கையளவு வேர்க் கடலையை எடுத்தான்.

என்ன ஆச்சரியம்! மந்திரக் குல்லா போட்டுக் கொண்டிருந்த கிட்டுவைக் கிழவிக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவள், "ஐயோ, கொள்ளை! கொள்ளை!" என்று கத்த ஆரம்பித்து விட்டாள்.

கிட்டுவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. தன்னைக் கிழவி எப்படிப் பார்த்துவிட்டாள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. இந்த வியப்புக்கு மத்தியில், "ஐயோ! அப்பாவுக்குத் தெரிந்து விட்டால் ......?" என்று நினைத்தபோது, அவன் உடம்பு பயத்தால் நடுங்கிற்று. திரும்பிப் பார்த்தான். நல்ல வேளையாக அப்பா அவனைக் கவனிக்காமல் தூரத்தில் போய்க் கொண்டிருந்தார். ஆனாலும், "என்ன செய்வது?" என்று ஒன்றும் தோன்றாமல் அவன் திருதிருவென்று விழித்தான்.

பின்னால் யாரோ கலகலவென்று சிரிக்கும் சத்தம் கேட்டது. கிட்டு திரும்பிப் பார்த்தான். குள்ளன் நின்று கொண்டிருந்தான். "நான் அப்பொழுதே சொன்னேனே, மறந்து விட்டாயா? மந்திரக் குல்லாவைப் போட்டுக் கொண்டு கெட்ட காரியம் செய்தால் அதன் சக்தி போய்விடுமென்று நான் சொல்லவில்லையா?— இப்பொழுது நீ வேர்க் கடலையைத் திருடப் பார்த்தாய்; அதனால் குல்லாவின் சக்தி போய் விட்டது!" என்று சொல்லிக் கொண்டே, குள்ளன் மந்திரக் குல்லாவுடன் உடனே மறைந்து விட்டான்.

★

காரணம்!

பட்சணம் வாங்க வந்தவர் (மிட்டாய்க் கடையில் வேலை செய்யும் குமாஸ்தாவிடம்):—என்னப்பா, இது? இந்த ரேஷன் காலத்திலே இந்தக் கடையிலே மட்டும் இவ்வளவு பட்சணம் எப்படி இருக்கிறது!

மிட்டாய்க் கடை குமாஸ்தா:—எங்கள் கடைப் பட்சணங்கள் ரேஷன் வருவதற்கு முன்னாலேயே செய்தவை, ஸார்!

★



வான சஞ்சாரம்



இசைத்தேனீ

"ஜி. என். பி.யின் சங்கீதமெல்லாம் ஒரே பிர்க்கா மயம் என்று சொல்லுகிறீர்களே, இன்றைய நாட்டக் குறிஞ்சி எப்படி ஸார்?" என்று ஒரு போடு போட்டார், அவரது 10உ ரேடியோக் கச்சேரியைக் கேட்ட ஒரு நண்பர். "வாஸ்தவம்; பைரவி ஹுஸேனி முதலிய இவை களைப் போல் நாட்டக் குறிஞ்சியையும் இனி அவரது பாவ ராக ஜாபிதாவில் சேர்த்துவிட வேண்டியதுதான்!" என்றேன். பிர்க்கா அம்சம் குறைந்து, ராக மூர்ச்சனையை அடிக்கடி காட்டும் வளைவு குழைவுகளுடனும் படிப்படியான தெளிவு சஞ்சாரக் கோவைகளுடனும் அந்த ராகம் இழைந்து வந்தது. ஹிந்தோளத்தை அடுத்தபடியாய்ச் சொல்லலாம். ஆனால் நடுநடுவே ஒதுங்கிய இடங்களை யெல்லாம் சிறு பிர்க்காத் துணுக்குகள் பொத்திக் கொண்டன. சுபபந்துவராளி ராகம் சில காலம் உருத் தெரியாது வழங்கி வந்ததுண்டு. த்வாரம் வெங்கடசாமி நாயுடு போன்றவர்களின் புண்ணியத்தால் அது உருப்பெற்று வருகிறது. ஜி. என். பி. சுருக்க மாய்ப் பாடிய அந்த ராகமும் கிருதி யும் அதை ஞாபகப் படுத்தின. வழக்கமான பிர்க்காப் பொழிவுடன் வெளிவந்த தேவ மனோஹரியில் மேல்ஸ்தாயி சஞ்சாரங்களில் ராகத் தெளிவு கண்டது. 'இன்னமும் தாமதமேன்' உருப்படியில் அமைந்த ஸ்வர ப்ரஸ்தாரங்கள் வெகு ஜோர். உருக்கம் கொடுக்கும் பாவம் உயரிய சங்கீதத்துக்கு முக்கிய லக்ஷணம் என்பதை ஜி. என். பி. நிச்சயம் செய்து கொண்டால் போதும். அவரது எல்லா ராகங்களும் தாமாகவே பாவப் பொழிவாய் விடும்.

7உ திருச்சியில் அமைந்த மாயவரம் கோவிந்தராஜப் பிள்ளையின் வயலின் கச்சேரி, சென்ற வாரத்திய முதல்தரக் கச்சேரிகளில் ஒன்று. வயலின் வாத்யத்தைச் சுருதி சுத்த மாயும், கமகப் பொழிவாயும், ராக ஸ்வரூபத் தெளிவுடனும் வாசிக்கும் கைதேர்ந்த வித்வான்களில் அவரும் ஒருவர். 'பல்லவி ராகமான காம்போதியும் ராகமாலிகையும் சுகமாயிருந்தன. விஜயநாகரி, ஆனந்த பைரவி ராகங்கள் வனப்பா யிலங்கின.

9உ திருச்சியில் இரவு 7-45 க்குக் குறிப்பிட்டிருந்த திருவெண்காடு சுப்ரமணியப் பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரி, 8-30 மணிக்குத் தொடங்கி ஒரு பாகமாயும், 10 மணிக்கு மற்றொரு பாகமாயும் அமைந்தது. அடங்கிய நாதக் குளிர்ச்சிக்கும் இனிமைக்கும் அவர் வாத்யம் புகழ்பெற்றது. அன்று வாசித்த ராகங்களில் ஜயந்தஸேனா, பூர்விகல்யாணி, கல்யாணி ராகங்களும், பல்லவி ராகமாலிகை யும் தரமாயிருந்தன.

அன்று சென்னையில் பாடிய திருவையாறு வி. வி. ராமச்சந்திரனுக்கு நடுத்தர சாரீரம்; நல்வழி: அரைமணி நேரத்தில் நான்கு ராகங்களையும் அவைகளின் உருப்படிகளையும் வழங்கினார். பாடியவரை கச்சிதமாயிருந்தது.

10உ திருச்சியிலிருந்து கேட்ட சிதம்பரம் சோமநாதனின் கானம் உயர்ந்த வகைகளில் ஒன்று. ஸ்ருதியும் இனிமையும் நிறைந்த குரல்: நல்ல தேர்ச்சி நிதானமும், கார்வை யழகும் கொண்ட சங்கீதம். ஹம்ஸத்வனி, ஸிம்மேந்திரமத்யமம், வாசஸ்பதி ராகங்களும் உருப்படிகளும் விசேஷமாயிருந்தன.

11உ சென்னையில் எம். எஸ். சிவராஜனின் கச்சேரி உயர்தரமாயிருந்தது. எனினும் பிர்க்காவைக் கொட்டும் சங்கீதக் குடும்பத்தைச் சேர்ந்தவராயினும், அதைப் போதிய வாறு 'ரேஷன்' செய்து கல்யாணி, சாவேரி, ஜாலவராளி ராகங்கள் உருப்படிகளை நிதான மாயும், வனப்பு வடிவங்களாயும் இழைத்தார்.

திருவனந்தபுரம் சகோதரிகள்



நாளது ஆகஸ்டு மாதம் 29உ திருச்சி ரேடியோ நிலையத்தில் காலக்ஷேப ரத்னாகர சங்கீத பூஷணி ஸ்ரீமதி பி. எல். சுப்புலக்ஷ்மி பாடுகிறார். அதற்கு முதல் நாள் 28உ அவருடைய சகோதரி ஸ்ரீமதி பி. எல். சரஸ்வதியும், மறுநாள் 30உ இன்னொரு சகோதரி ஸ்ரீமதி பி. எல். லக்ஷ்மியும் பாடுகிறார்கள்.

மேற்படி திருவனந்தபுரம் சகோதரி களின் தற்போதைய விலாசம்: ஸ்ரீ என். பத்மநாப ஐயர், 36, டுமீங் குப்பம் தெரு, ஸான்தோம், மயிலாப்பூர்.



சுந்தரியின் தவம்

பி. ஆர். ராமஸ்வாமி

சுந்தரியின் சிநேகிதியிடமிருந்து வந்த அடுத்த கடிதம் அவளை உண்மையாகவே பயப்படுத்தி விட்டது.

"அன்புள்ள சுந்தரி,

நம்ம வீட்டிற்கு வரும் குப்பா சாஸ்திரி ஜோசியர் எதிர் வீட்டிற்குச் சென்று வெகு நேரம் பேசிவிட்டு வந்தார். நாங்கள் கேட்டதற்கு அவர் பதில் சரியாய்ச் சொல்லவில்லை. அப்படி மறைக்க வேண்டிய சங்கதி என்ன? ஏதோ கல்யாணத்திற்கு ஏற்பாடு போலிருக்கிறது. எதற்கும் படிப்பை விட்டுவிட்டு வந்துவிடு. இல்லாவிட்டால் காரியம் மீறிவிடும். இப்படிக்கு,

உன் அன்புள்ள கோமளம்."

இந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்ததைக் கண்ட சுந்தரியின் தாயார், "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டுக் கடிதத்தை வாங்கிப் பார்த்தாள். சுந்தரியின் தகப்பனாரைப் பார்த்து "நான் அப்பொழுதே சொன்னேனே, முன் பின் தெரியாதவர்களுக்குப் பெண்ணை கொடுக்க வேண்டாமென்று! அவர்களுக்கும் பணம்தான் பெரிசு. அக்கறை ஏது? அவன் வேறு கல்யாணம் பண்ணிக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறானும்" என்றாள். அதற்குச் சுந்தரியின் தகப்பனார், "ஒரு வேளை சுந்தரி எப்பொழுது வருவாள் என்று ஜோசியம் பார்த்திருப்பான். ஜோசியமெல்லாம் கல்யாணத்துக்கே என்று ஏன் எண்ண வேண்டும்? எதற்கும் சபேசனை அழைத்துக் கொண்டு சுந்தரி டில்லிக்குப் போகட்டும்" என்றார்.

சுந்தரியின் தாயார், "உங்கப்பாவுக்கு மாப்பிள்ளையைக் கண்டிக்க எப்படி தைரியமிருக்கும்? என்னை அழைத்துக் கொண்டு போன், என் தகப்பனாரை வரதக்ஷிணை பாக்கியை வாங்குவதற்காக வேறு கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறதாக மிரட்டவில்லையா?" என்றாள்.

"சரி, நிறுத்து! பசிக்கிறது. என்ன சமையல்?" என்று சம்பாஷணையை சங்கடமான விஷயத்திலிருந்து திருப்பினார் சுந்தரியின் தகப்பனார்.

சுந்தரி தன் அழகை நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். தான் அழகாயிருந்தாலும் தன்னைவிட அழகாயிருக்கக் கூடியவர்களும் இருக்கமாட்டார்

சுந்தரி தன் கணவனின் கடிதத்தைப் படித்தாள்.

"ஒரு வருஷம் சுரம் வந்து பரீக்ஷைக்குப் போக முடியாமற் போனதால் அதைரியமடையாதே! பி. ஏ. பாஸ் செய்துவிட்டு வா. நான் எப்படியாவது உன் பிரிவைப் பொறுத்துக் கொள்ளுகிறேன். ராமேசன்."

ஹைஸ்கூல் வரையில் தன்னுடன் படித்து, ஸ்கூல் பைனல் பரீட்சை பாஸ் செய்தவுடன் இந்தப் படிப்பினால் உண்மை ஞானமுண்டா, பண்புண்டா, குடும்பத்திற்காவது சமூகத்திற்காவது பயனுண்டா, ஒன்றுமில்லை என்று படிப்பை நிறுத்தி விட்ட தன் பால்ய சிநேகிதி கோமளத்தின் கடிதத்தையும் படித்தாள். அவள் ராமேசன் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசித்து வந்தாள். கோமளத்தின் கணவனுக்கும் சுந்தரியின் கணவனைப் போலவே செக்ரடேரியட்டில் வேலை.

"அன்புள்ள சுந்தரி,

நீ அங்கே என்ன செய்கிறாய்? நீ உன் கணவனின் பெருமையை அதிகரிக்கக் கஷ்டப்பட்டுப் படித்துக் கொண்டிருக்கிறாய். இங்கே உன் கணவன் சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்து வருகிறார். யாரோ ஓர் அழகிய பெண் ஒரு கிழவியுடன் அங்கே வந்து சேர்ந்திருக்கிறாள். பி. ஏ. ஆனர்ஸ் படிக்கிறாள். யாரோ வாத்தியார் ஒருவர் பாட்டும் பரத நாட்டியமும் கற்றுக் கொடுக்கிறார். என் காதுக்கு எட்டிய வரையில் அவள் பாட்டும் அவளுடைய அழகைப் போலவே. அவள் நாட்டியத்தைப் பார்க்கத்தான் கொடுத்து வைக்கவில்லை. இந்தக் காலத்து ஆடவர்களை நம்பாதே! கோமளம்."

சுந்தரி பொருள் செறிந்த இந்தக் கடிதத்தைப் படித்தபின் மிகவும் கலவரமடைந்தாள். எப்படியோ மனதைத் திடப்படுத்திக் கொண்டு சிந்தையை அடக்கிப் படிப்பில் கவனம் செலுத்தி வந்தாள். தாயார் மூலம் கடிதத்திலிருந்த விஷயத்தை யறிந்த அவள் அண்ணன்மார்கள் அதை நம்பவில்லை. ஆனால் சுந்தரியைக் கேலி செய்தார்கள். "டில்லிக்குப் போகிறாயாமே?" என்றார்கள்!

...ளா? மேலும், தூரம் நினைவுக்குத் திரை போடும். தன் தவம் தன்னைக் காப்பாற்றுமா என்று ஆண்டவனைத் தியானித்தாள். டில்லியில் வேலை தேடும் பொருட்டுச் செல்லத் தயாராயிருந்த கடைசி அண்ணன் சபேசனுடன் அவள் டில்லிக்குப் புறப்பட்டாள்.

வீடு பூட்டியிருந்தது. பொழுது போக்க 'டவு'னை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார்கள். ஒரு பிரசித்தமான தியேட்டரின் வெளியே, "பரதநாட்டியம்; மதராசி பள்ளிக்கூட நிதி வசூல் உதவிக்காக" என்ற விளம்பரத்தைக் கண்டு டிக்கெட் வாங்கி உள்ளே நுழைந்தார்கள். காட்சியும் அபூர்வமாயிருந்தது. சபைத் தலைவர் வந்தனோபசாரம் கூறினார். அதில் ராமேசன் எம். ஏ. வுக்கு நன்றியளிக்கப்பட்டது. வந்தனோபசாரம் கூறியவர் மதராசி. மாண்டிசோரி பள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல வாத்தியாரையும் பள்ளிக்கூடத்திற்கு நல்ல நிதியையும் ஒருங்கே அளித்ததற்கு ராமேசனை மிகுந்த நன்றியுடன் பாராட்டினார்.

சுந்தரியும் சபேசனும் கலவரத்துடன் பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களை வாசலில் பார்த்த கடன சுந்தரி உள்ளே சென்று, "அண்ணா! யாரோ வந்திருக்கிறார்கள்" என்றாள். ராமேசன் வெளியே வந்து சுந்தரியையும் அவள் அண்ணனையும் பார்த்து, "ஓகோ! இது என்ன? ஏன் கடிதாசி போடவில்லை?" என்று உள்ளே அழைத்துச் சென்று, கடன சுந்தரியைக் காப்பி போட்டுக் கொண்டு வரச் சொன்னான். காப்பி வந்ததும் சாப்பிட்டுக் கொண்டே, "அந்த அம்மா யார்?" என்று கிழவியைப்பற்றி விசாரித்தான் சபேசன். முதலில் அவள் யார் என்று தெரிந்து கொண்டால், அப்புறம் அந்தப் பெண் யார் என்பது தானே தெரிந்து விடுமென்பது அவனுடைய எண்ணம். ராமேசன், "அவள் என்னுடைய பெரிய தாயார். தன் பெண்ணுடன் இங்கேயே சில மாதங்களாயிருக்கிறாள்" என்று சொல்லிவிட்டு, "சுந்தரி, நீ பி. ஏ. படித்து முடிக்கவில்லையா? பெனாரிஸ் சர்வகலாசாலைக்கு இங்கிருந்தே படிக்கலாம். நீயும் ருக்மணியுடன் வாத்தியார் வேலைபார்க்கலாம்" என்றான்.

சுந்தரியை வெட்கம் பிடுங்கித் தின்றது. ஆனாலுமென்ன? இதயத்திலிருந்த பாரம் நீங்கிற்று. ராமேசன் மேலும் "ருக்மணியை என் சிநேகிதன் ராமசேஷனுக்குக் கொடுத்துக் கல்யாணம் நடக்கப் போகிறது. நல்ல வேளை! நீ சமயத்திற்கு வந்தாய்!" என்று சொன்னதும், சுந்தரிக்கு ஆகாயத்தில் பறக்கிற மாதிரியிருந்தது.

அடுத்த நாள் முழுவதையும் சுந்தரி தன் சிநேகிதி கோமளத்துடன் கழித்தாள். அவர்கள் எதற்காக விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள் என்று கோமளத்தின் சின்னஞ்சிறு தம்பிகளுக்கு விளங்கவில்லை.

தற்கால ஹாஸ்யம்

இன்னும் பாக்கியிருக்கிறது!

"அரிசி ரேஷன் வந்தது; அப்புறம் துணி ரேஷன், மண்ணெண்ணெய் ரேஷன்; இப்பொழுது சர்க்கரை ரேஷன்!...... ஹூம்......இனிமேல் ரேஷன் வருவதற்கு ஒன்றுமே பாக்கி இல்லை!"

"ஏன் இல்லை? நம்மையெல்லாம் ஆபரேஷன் செய்வது பாக்கியிருக்கிறதே!"

—என். நாராயணன்.

★

போதவில்லை!

ஒருவர்:—என்ன ஓய் இது! இப்போது தான் 'கஸ்தூரி பவ'னிலே சாப்பிட்டு வந்தீர்! அதற்குள்ளே இந்த ஹோட்டலிலே ......!

நண்பர்:—சத்தம் போடாதீர்! ஹோட்டலிலே சாப்பிடுவதற்கும் 'பர்மிட்' வரப் போகிறதாம். அதுவரையிலாவது வயிறு நிறையச் சாப்பிட்டு வைக்கலாம்!

—கோபால்.

வேறு வழியில்லை!

"என்ன ஓய், இந்த சோத்திலே கை காட்டி மரத்திலே ஏறுகிறீர்? ஏதாவது கிபோ?"

"உஷ்! பேசாமலிரு; இந்த மரத்தையாவது வெட்டிக் கொண்டு போகாட்டா இன்னைக்கு அடுப்பில் பூனைதான்!"

—வி. அமிர்தம்பாள்.

★


முன் ஜாக்கிரதை!

மனைவி:—ஐயையோ, குழந்தை மண்ணைத் தின்கிறது, பிள்ளையார் மாதிரி பார்த்துக்கொண்டே இருக்கிறீர்களே!

புருஷன்:— அசடே! இப்பொழுதே அரிசிரேஷன் 16 அவுன்ஸிலிருந்து 8 அவுன்ஸ் ஆகிவிட்டது. நம் குழந்தை வயதாகும் காலத்தில் அரிசி கிடைக்கிறதோ, என்னமோ? மண்ணைச் சாப்பிட்டுப் பழக்கம் செய்து கொள்ளட்டும்!

—என். சுந்தரம்.

நீங்கள் பிரியப்படும் கறிகளுக்கு டால்டா சுவையளிக்கிறது—மேலும் உங்களுக்கு ஊக்கத்தையும் கொடுக்கிறது!





டால்டாவினுல் சமையல்செய்த உணவு பழுதாகாது! எளிதில் ஜீரணமாகின்றதும், விடமின் நிரம்பியதுமான டால்டா, வழக்கமாக உட்கொள்ளும் தின்பண்டங்களைக் கூட அதன் இனிய வாசனையால் ருசியுள்ளதாக்குகிறது—அதனுல் உங்களுக்கு தினமும் சாப்பிடும் உணவுகளின்மேல் சலிப்பு ஏற்படுவதில்லை. டால்டாவினுல் சமையல் செய்யுங்கள். இச்சுத்தமான சமையலுக்குதவும் சாதனத்தின் அறிந்த சத்தைத்தரும் திறமையைக் கொண்டு உங்கள் உணவைச் சிறப்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா சமையலுக்குகந்த சாதாரண வஸ்து அன்று என்பது ஞாபகமிருக்கட்டும்—அது குடும்பங்களை ஆரோக்கியமுடையதாகச் செய்யும்; அவர்களுக்கு அதிகப்படியான ஊக்கத்தையும் அளிக்கும்.

* ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. B461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு காலணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 60-23 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO. LTD.



Edited, Printedand Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



ஆசிரியர் : விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

ராமநாத பாபுவின் முகபாவத்தை ிராஜகிசோர் நன்கு கவனித்து விட்டார். ாமநாத பாபு தனது முக பாவங்களை வெகு சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு, ஆமாம், ஆமாம். கிராமத்திற்குப் போகாமல் பெண்ணுக்கு எப்படிக் கல்யாணம் செய்ய முடியும்? கல்யாணம் சுற்றத்தார் இல்லாமல் செய்ய முடியுமா? வரனும் பார்த்தாக வண்டும் அல்லவா?" என்றார்.

"ஆமாம், பெண் விஷயம் அல்லவா? று சொந்தக்காரர்கள் இல்லாமல் எப்படிக் ாரியம் நடக்கும்? ஜல்லோ பெண்ணாக ட்டும் பிறந்திராமல் பிள்ளையாகப் பிறந் ிருந்தால், ஊர்ப் பேச்சையே எடுத்திருக்க ாட்டேன். எனக்கு அங்கே போக வண்டும் என்ற எண்ணமே இல்லை ஆனால் ன்ன செய்வது? விதி ஆட்டி வைக்கிறது! ந்தப் பெண்ணுக்காக எதையும் செய்து ான் ஆகவேண்டும்" என்று கூறி நந்து முடித்தான்.

"ஆமாம், நீ இந்தப் பிச்சைப் பிழைப்புப் ழைப்பானேன்! அப்பொழுதே எங்கே வது வேலை தேடிக் கொண்டிருக்கக் டாதா?" என்றார் விராஜகிசோர்.

"அதுவும் விதி செய்த வேலைதான். லைக்குத் தேடாத இடம் எல்லாம் தேடி னன். எங்கும் வேலையே கிடைக்கவில்லை. ச்சைக் குழந்தை பசியால் வாடி மடிவதை ன் கண்கள் காணச் சகிக்கவில்லை. கடைசி ல் வேறு வழியின்றி கடவுள் விட்ட வழி துதான் என்று எண்ணி பிச்சைக்கார வாழ்வு வாழ ஆரம்பித்து விட்டேன்" என்று சொன்ன பொழுது அவனுடைய கண்களில் கண்ணீர் மல்கி நின்றது.

"சரி, நீ போய்விட்டு வா!" என்று கூறி ராமநாத பாபு நந்துவை அனுப்பிவிட்டார்.

நந்து சென்றதும் விராஜகிசோர், "ஆள் நல்லவன்தான். ஆனால் உனக்கு அதிருஷ்டம் இல்லை. நீயோ 'கத்ரி' வகுப்பு; அவனோ 'டாகுர்'. இப்படியிருக்கும்பொழுது நீ கல்யாணத்தைப் பற்றி யோசிப்பதே பைத்தியக்காரத்தனம்" என்றார்.

"இரண்டு பேரும் க்ஷத்திரியர்கள் தானே! என்ன தப்பு?" என்று கேட்டார் ராமநாத பாபு.

"இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல என்றால் ஆகாது. அவனைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீ கங்கணம் கட்டிக்கொண்டல்லவா பேசுகிறாய்?"

ராமநாத பாபு சிறிது வெட்கப் புன்முறுவலுடன், "அதற்காகக் கேட்கவில்லை, அப்பா! இரண்டு பேரும் க்ஷத்திரியர்கள் தானே' ஏன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்றுதான் கேட்டேன்!" என்றார்.

"அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. யாராவது பெரியவர்களைக் கேட்டுப் பார். நான் உலகத்திலே நடக்கிறதைச் சொன்னேன். எனக்கென்ன? நடந்தால் ரொம்ப சந்தோஷமே! அதுவும் உன் விஷயத்திலே — உன் ஆசை பூர்த்தி அடைகிறதிலே — எனக்கு ஏதும் ஆட்சேபணையே இருக்க முடியாது. உண்மையிலே சொல்

கிறேன்—கடவுள் புண்ணியத்திலே உனக்கு வாய்த்த காதலி இருக்கிறாளே, அவள் நல்ல முறை தத்துவமான காதல் வழியிலே பிறந்தவள். அவள் பிறந்ததே காதல் - அன்னையின் வயிற்றில். அவளது இரத்தத்தில் காதல் அணுக்கள் முன்பிருந்தே நிரம்பிக் கிடக்கின்றன. ஆகையினால், இந்தக் காதல் நங்கை—உனது காதலுக்குப் பாத்திரமான—காதல் வழியே வந்த—இந்தக் காதல் நங்கை அவளது தாயைப் போலவே காதலில் ஈடுபாடு உள்ளவளாகவே இருப்பாள் என்று எனக்குப் பூர்ண நம்பிக்கை இருக்கிறது. ஆனால், நீயும் அவளுடைய தகப்பனைப் போல் உண்மைக் காதலனாக இருப்பாயா என்றுதான் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது" என்று பரிகாசம் செய்தவாறே எழுந்த விஜயகிசோர், "இதோ பார் அப்பா, எங்கேயாவது ஓடிப்போக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டால், நேரே என் வீட்டுக்கு வந்து விடு. உனக்குச் சிரமம் ஏற்படாமல் நானும் நந்துவின் கிஷோரியைப் போல் கவனித்துக் கொள்கிறேன்" என்று மறுபடியும் கூறினார்.

ராமநாதபாபு இதைக் கேட்டு முகத்தைச் சிறிது கடுகடுப்பாக வைத்துக் கொண்டு, "நீ வரவர ரொம்ப மோசமாகப் போய் விட்டாய்! என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கிறது?" என்றார்.

விஜயகிசோரும் "ஏதோ, சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன்" என்று கூறியவாறு புன்முறுவலுடன் புறப்பட்டு விட்டார்.

8

அந்தச் சம்பவம் நடந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. யசோதராவை மறக்க ராமநாதபாபு பல முறை முயன்றார். ஆனால் அவருக்கு அதில் வெற்றி சிறிதும் கிட்டவில்லை. "நமது வீட்டில் நந்துவுக்கு இடம் கொடுத்தது தப்பு. அவன் நம்முடைய வீட்டில் இல்லையென்றால் இப்படி அடிக்கடி அவளுடைய ஞாபகம் நமக்கு வருமா? அவன் அடிக்கடி நம் கண் பார்வையில் பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, அவளை மறப்பது என்பது முடிகிற காரியமா?" என்று எண்ணினார்.

ஒரு நாள் நந்துவைக் கூப்பிட்டு, "உன் ஊர்ச் சமாசாரம் ஏதாவது தெரிந்ததா?" என்று கேட்டார்.

"நான் போகவே இல்லையே!" என்று பதில் அளித்தான் நந்து.

"அப்படியெல்லாம் இருக்கக் கூடாது ஒருதடவை நீ அவசியம் உன் ஊருக்கு போய்விட்டுத்தான் வரவேண்டும்."

"என்ன செய்வது, எசமான்! நா ஊருக்குப் போகவேண்டுமென்று நினைக்கு பொழுதெல்லாம் மனது என்னவோ செ கிறது."

"நீ ரொம்பப் பயங்கொள்ளியாயிரு கிறாய்! எதற்காகப் பயப்பட வேண்டும்?"

"எசமான், என்ன செய்வது? மன துணிய மாட்டேன் என்கிறதே!"

"நான் சொல்வதைக் கேள். நாளைக் கா யில் நீ லக்னோவுக்குப் போய் உன் வீட்டு சமாசாரத்தைத் தெரிந்து கொண்டு சா ந்திரத்துக்குள் வந்துவிடு."

"இவ்வளவு அவசரம் எதற்கு, எசமான்?"

"அவசரமோ அவசரமில்லையோ—நாளைக்கு இந்தக் காரியத்தைச் செய்து வேண்டும்."

"சரி, நீங்கள் சொல்லுகிறபடி செ கிறேன்" என்று கூறிவிட்டு நந் போய்விட்டான்.

இரவு அவன் தன் மகள் யசோதராவிட "ஜல்லோ, நாளைக் காலையில் நான் லக்ே வரைக்கும் போய்விட்டு வருகிறேன் என்றான்.

"லக்னோவுக்கா? எதற்கு?" என்று ஆ சரியத்துடன் கேட்டாள் யசோதரா.

"ஒரு வேலையாகப் போகிறேன்."

"என்ன வேலை, அப்பா?" என்று ஆ லாகக் கேட்டாள் யசோதரா.

"ஒரு ஆளைப் பார்த்து நம் கிராமத்தை பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்."


"நம் கிராமத்தைப் பற்றியா?"

"ஆமாம். உன் தாத்தா - பாட்டி இரு கிறவரைப் பற்றித்தான்."

தனக்குத் தாத்தாவும் பாட்டியும் இரு கிறார்கள் என்பது இதுவரை யசோதரா க்குத் தெரியவே தெரியாது. தனக்குத் தக யைத் தவிர வேறொருவரும் இல்லை என் இன்றுவரை அவள் எண்ணிக் கொண்டி தாள். ஆகவே, அவள் ஆச்சரியத்துட "என் அப்பா, எனக்குத் தாத்தாவும் பா டியும்கூட இருக்கிறார்களா?" என் கேட்டாள்.

நந்து சிறிது தயக்கம் தோய்ந்த குர "இருக்கிறார்கள், அம்மா!" என்றான்.

"இதுவரைக்கும் எனக்குச் சொல்ல இல்லையே, அப்பா!"



"சொல்லி என்ன பிரயோஜனம்! — நீ அப்பொழுது குழந்தையாய் இருந்தாய்."

"நாம் இதுவரைக்கும் அங்கே போகவே இல்லையே!"

"வேலையிருந்தால் அல்லவா போவதற்கு?"

"என்ன!"

"வீட்டிலே எல்லாருடனும் சண்டை."

"என்ன!—சண்டையா? எதற்கு?"

"ஏதோ சண்டை வந்து விட்டது. வீட்டை விட்டு வந்துவிட்டேன். அப்புறம் போகவே இல்லை."

யசோதரா சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். அவளுடைய முகத்தில் ஆச்சரியமும் கவலையும் மாறி மாறித் தோற்றம் அளித்துக் கொண்டிருந்தது.

"கடவுள் கிருபை இருந்தால் நாம் இனிமேல் கிராமத்திலேயே போய்த் தங்கி விடலாம்" என்று நந்து சொன்னான்.

"அப்படியானால் இந்த வேலையை விட்டுவிட வேண்டியிருக்குமே?"

"ஆமாம், விட்டு விடத்தான் வேண்டியிருக்கும். எதையும் இப்பொழுது நிச்சயமாகச் சொல்வதற்கில்லை."

யசோதரா மறுபடியும் கவலையுடன் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்து விட்டு, "என் அப்பா, நமக்கு அங்கே வீடு வாசல் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"பெரிய வீடு ஒன்று இருக்கிறது. மாடு, கன்று, பசு, வண்டி எல்லாமே இருக்கிறது, அம்மா!"

"அப்படியிருக்கும் பொழுது நாம் ஏன் பிச்சை வாங்கிக் கொண்டிருந்தோம், அப்பா?"

"என்ன செய்வது அம்மா, வீட்டிலே எல்லாரோடும் சண்டை. அங்கு எப்படிப் போவது?"

"ஏன்? எதற்காகச் சண்டை போட்டுக் கொண்டீர்கள், அப்பா?"

"எதற்காகவோ சண்டை போட்டுக் கொண்டோம்! அதெல்லாம் உனக்கு எதற்கு?"

"தாத்தா, பாட்டி எல்லாரும் என்னைப் பார்த்திருக்கிறார்களா, அப்பா?"

"பார்த்ததில்லை. ரொம்ப நாளைக்கு முன் நானும் உன் அம்மாவும் அவர்களுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டோம். அப்புறம்தான் நீ பிறந்தாய்."

"அப்புறம் நீ அங்கே போகவே இல்லையா, அப்பா?"

"போகவே இல்லை, அம்மா!"

யசோதரா யோசனையில் ஆழ்ந்து விட்டாள். சிறிது நேரம் கழித்து அவள் தன் தந்தையைப் பார்த்து, "அப்பா, ஒரு தரம் நாம் ஊருக்குப் போய்விட்டு வருவோமே; எனக்குத் தாத்தாவையும் பாட்டியையும் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஆனால், அப்பா, நாம் அங்கேயே தங்கிவிடக் கூடாது. இங்கே திரும்பி வந்துவிட வேண்டும். இந்த வேலையை நீ விட்டுவிடக் கூடாது, என்ன?" என்றாள்.

"சண்டை தீர்ந்துவிட்டால் அப்புறம் நாம் எதற்கு இங்கே திரும்பி வரவேண்டும்?"

"அப்பா, எனக்குக் கிராமத்திலே இருக்கப் பிடிக்காது. அங்கே எனக்கு யார் படிப்புச் சொல்லிக் கொடுப்பார்கள்?"

"நீ படித்து என்ன செய்யப் போகிறாய்? வேலை கீலை பார்க்கப் போகிறாயா?"

"வேலை பார்ப்பது என்றால்தான் படிக்க வேண்டுமா?"

"சரி, அதிருக்கட்டும். நான் நாளை ஊருக்குப் போய் சமாசாரத்தைத் தெரிந்து கொண்டு வரட்டுமா?"

"சரி" யென்று தலையசைத்தாள் யசோதரா.

* * *

மறு நாள் அதிகாலையில் சந்து லக்னோ நகருக்குப் புறப்பட்டான். அவன் பார்க்கச் சென்ற ஆள் ஒரு சேட்ஜியின் கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சந்துவைப் பார்த்ததும், "வா அப்பா சந்து இவ்வளவு நாள் எங்கே இருந்தாய்? ஆளை கண்ணிலேயே காணோமே!" என்று சொல்லிக்கொண்டே அவன் வரவேற்றான்.

"எங்கெங் கெல்லாமோ சுற்றிக் கொண்டிருந்தேன், அப்பா!" என்று பதில் அளித்தான் சந்து.

"சுற்றிச் சுற்றி நீயும் உன் நாளைக் கழித்து விட்டாய். வீடு வாசல், தோட்டம் துரவு பணம் காசு உள்ள நீ இப்படி ஊர் ஊராகச் சுற்றும்படி தலையில் எழுதியிருக்கிறது பார்த்தாயா?"

"என்ன செய்வது அப்பா, மனுஷர் தலையில் எழுதின எழுத்தை அழிக்க யாரால் முடியும்?"

"நீ பெரிய பிசகு செய்து விட்டாய். நீ வீட்டை விட்டு வந்திருக்கக் கூடாது."

"நான் செய்ததில் ஒன்றும் பிசகில்லை. விதிதான் என்னை ஏமாற்றி விட்டது. இன்று சோனு மட்டும் உயிருடன் இருந்திருந்தால் எனக்கு எதுவுமே கஷ்டமாகத் தோன்றாது."

"இன்னும் சுற்றிக் கொண்டேதான் இருக்கிறாயா?"

"இல்லை; கான்பூரில் ஒருவர் வீட்டிலே வேலை பார்க்கிறேன்."

"வேலை பார்க்கிறாயா? வீணாகச் சுற்றித் திரிவதை விட்டு விட்டாயா, தேவலையே!"

"வேலை பார்ப்பதற்கு எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. இருந்தாலும் ரொம்பவும் பிரியமான ஒரு எஜமானர் எனக்குக் கிடைத்தார். கடைசியில் அவர் சொல்லைத் தட்ட முடியவில்லை. பெண்ணுக்கும் கல்யாணம் செய்தாக வேண்டுமே! ஓரிடத்திலே இருந்தால்தானே சிறிது சௌகரியமாக முடியும்!"

"பாதகம் இல்லை, நல்ல யோசனை."

"எனக்கு வந்த கஷ்டம் யாருக்குமே வரக் கூடாதப்பா! வீடு வாசல், அப்பா அம்மா எல்லாவற்றையுமே விட்டு விட்டேன். யாருக்காக இதையெல்லாம் விட்டேனோ, அவளும் என்னை ஏமாற்றி விட்டு மறைந்து போனாள். இந்த மாதிரி நிலைமையில் என் முடிவு தான் சரியாக இருக்கும், நீயே சொல்."

"நீ சொல்லுவது உண்மைதான். தலையில் எழுதின எழுத்துப்படிதானே எல்லாம் நடக்கும். இனிமேல் இதையும் விட்டுவிட்டு எங்கே யாவது போய்விடாதே!"

“இனிமேல் போவதாவது! நான் போக வேண்டுமென்று நினைத்தாலும் என்னுடைய எஜமான் விடவே மாட்டார்.”

“பெண்ணும் அங்கேதானே இருக்கிறாள்?”

“ஆமாம், அங்கேதான் இருக்கிறாள்.”

“நல்லதாகப் போச்சு. எங்கேயாவது சௌகரியமாகக் கல்யாணம் ஆகிவிட்டால் போதும்.”

“அதற்காகத்தானே வேலையை ஒத்துக் கொண்டேன்.—ஆமாம், ஊர்ச் சமாசாரம் உனக்கு ஏதாவது தெரியுமா?”

“ஆமாம்; போன மாதம் ஊருக்குப் போயிருந்தேன். எல்லாரும் சௌக்கியமாயிருக்கிறார்கள். உன் அப்பா ரொம்பக் கிழவராகிவிட்டார். நடமாட்டமே இல்லை. பாவம், இப்போது அவர் ரொம்ப வருத்தப் படுகிறார்.”

“என்ன? வருத்தப்படுகிறாரா?” என்று ஆவலுடன் கேட்டான் சந்து.

“ஒரு நாள் உன்னுடைய அப்பா என் அப்பாவிடம் வந்து ‘சந்து செய்தது தப்புத்தான். இருந்தாலும், அவன் வீட்டுக்கு வந்தால் நான் விரட்டிவிடுவேனா? பாவம், எங்கே போனானோ, எப்படியிருக்கிறானோ’ என்று சொல்லிக் கொண்டிருந்தார். அதற்கு என் அப்பா ‘டாகுர், நீ செய்ததுதான் தப்பு. அவன் சொன்னதை நீ கேட்டிருந்தால் அவன் ஓடியிருப்பானா?’ என்று கேட்டார். ‘எனக்கு என்ன அப்பா தெரியும்? அவர்கள் இரண்டு பேருக்கும் இவ்வளவு அந்நியோன்னியம் இருக்கும் என்று தெரிந்திருந்தால், அவன் இஷ்டப்படியே செய்திருப்பேன்’ என்றுகூடச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்புறம் ஒரு நாள் உன் அப்பா என்னிடம் வந்து ‘நீ பட்டணத்தில் இருக்கிறாயே, சந்துவைப் பற்றி ஏதாவது உனக்குத் தெரியுமோ?’ என்று கேட்டார். எனக்கு ஒன்றும் தெரியாது என்று நான் சொல்லிவிட்டேன்.”

“நல்ல வேலை! அவருக்கு நான் இருந்தென்ன, இறந்தென்ன! இரண்டும் ஒன்றுதானே!”

“அப்படிச் சொல்லாதே, என்னவோ கோபத்திலே அப்படிச் சொல்லி விட்டார். எவ்வளவு நாள்தான் அந்தக் கோபம் நிலைத்து நிற்கும்? நீ ஒரு தடவை வீட்டுக்குப் போய்ப் பார்: அவர் பழைய கோபத்தை எல்லாம் மறந்து உன்னை அன்புடன் வரவேற்கிறாரா இல்லையா என்று தெரிந்து கொள்.”

“அதிருக்கட்டும். லோனுவின் அப்பா எப்படி இருக்கிறார்? என்னிடம் ரொம்பக் கோபமாயிருக்கிறாரோ?”

“அதெப்படி உன்னிடம் கோபிக்க முடியும்? அவருடைய பெண்மீதும் குற்றம் இருக்கத்தானே இருக்கிறது. அவள் உன்னுடன் வரத் தயாராயிருந்ததால்தானே நீ அவளை அழைத்துக்கொண்டு ஓடினாய்?”

“ஆமாம்; நீ சொல்வதில் உண்மையிருக்கத்தான் செய்கிறது. எல்லாம் விதி செய்த வேலை. பிறர்மேல் குற்றங் கூறி என்ன பயன்?”

“அதுதான் நானும் சொல்கிறேன். ஒரு தடவை நீ உன் கிராமத்துக்குப் போய்விட்டு வா. உன் அப்பா அம்மாவுக்கு வயசாகி விட்டது. இன்னும் ரொம்பக் காலம் இருக்க மாட்டார்கள். இப்படியெல்லாம் இருந்தாயானால் பின்பு வருத்தப்படும்படியாகிவிடும். ஆகையால் சீக்கிரம் ஊருக்குப் போய் வா!”

“ஆகட்டும்; நீ இந்தத் தடவை கிராமத்துக்குப் போனால், ‘நான் உயிரோடு இருக்கிறேன்—கான்பூரில் இருக்கிறேன்’ என்று மட்டும் சொல்லு. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் கவனி.”

“ரொம்ப சரி!” (தொடரும்)



“கொசு உபத்திரவம் தாங்காமல் கொசு வலைத் துணி வாங்கி வைத்திருந்தேனே, அதெல்லாம் எங்கே?”

“அடாடா! எனக்கு ரவிக்கைக்காக வாங்கி வைத்திருக்கிறாய் என்று எண்ணி அத்தனையும் ரவிக்கை தைத்து விட்டேன்.”

மந்திரிகள் யோசிக்கட்டும்!

வ. சா. நாகராஜன்

“தாஹுகா ஆபீஸ் குமாஸ்தா!” “தாஹுகா ஆபீஸ் குமாஸ்தா!!” “தாஹுகா ஆபீஸ் குமாஸ்தா!!!” என்று அவசரப்படாமல் நிதானமாக மூன்று தடவை சொல்லிப் பாருங்கள். உங்களுக்கே ஒரு பொறுமை உண்டாகும்.

'ரேஷன்' தொல்லையை மறந்து, பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க முடியாத கவலையை மறந்து, பெண்ணுக்குக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்ய முடியவில்லையே என்ற கவலையையும் மறந்து, முழு மனதையும் 'ஆபீஸ்' வேலையிலேயே மிகப் பொறுமையுடன் செலுத்தும் அந்தக் குமாஸ்தாக்களின் பெயரைச் சொன்னாலேயே உங்களுக்கு ஒரு பொறுமை உண்டாகும்.

அவசர அவசரமாகச் சாதத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு ஈரத் தலையைக் கையால் கோதி உலர்த்திக்கொண்டு நெற்றியில் இட்டுக்கொண்ட சந்தனம் கூடக் காயாமல், அம்பிக் குழவி மாதிரி பிதுங்கிக் கொண்டு வரும் 'பிளாஸ்'கைக் கோட்டுப் பையில் திணித்துக்கொண்டு, ஒரு கையில் 'ஆபீஸ் பைல்'களையும் மற்றொரு கையில் 'டிபன்' பையையும் எடுத்துக் கொண்டு அவர்கள் ஆபீஸை நோக்கிப் பரபரப்புடன் ஓடுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்.

எவ்வளவு சீக்கிரம் கிளம்பினாலும் பத்து நிமிஷத்திற்கு 'லேட்'டாகப் போய்விடும். அதற்காக 'ரேஷன் ஆபீ'ஸுக்குப் போனதாலும் 'லேட்' என்று பொய்யாகவே 'ரிஜிஸ்டரில்' எழுதி வைத்துவிட்டு நாற்காலியில் போய் உட்கார்ந்தாரானால், ஒரு தனி உலகத்திற்கே போய்விடுவார் குமாஸ்தா. வீட்டில் மனைவி ஏதாவது கேட்டால் 'வள்' ளென்று கோபித்து விழுவார். 'ஆபீஸ'க்கு வந்துவிட்டால் சாந்த ஸ்வரூபியாகி விடுவார். 'ஹெட்' கிளார்க் கோபித்துக் கொண்டாலும் சரி, பெரிய ஆபீஸர்கள் 'வள்'ளென்று விழுந்தாலும் சரி, அவைகளையெல்லாம் ஒரு அசட்டுப் புன்னகையிலேயே ஜீரணமாக்கிக் கொண்டு விடுவார் குமாஸ்தா.

11 மணிக்கு இடத்தில் வந்து உட்கார்ந்தவுடன் முதல் வேலையாக வீட்டிலிருந்து கொண்டு வந்த 'பைல்'களை மானேஜருக்குக் கையெழுத்துக்காக அனுப்புவார். எவ்வளவு 'பைல்'கள் மேஜையின்மேல் கொலு வைத்தது போல் அடுக்கடுக்காக இருந்தாலும் கொஞ்சம்கூடக் கோபமோ ஆத்திரமோ வராமல் மிகப் பொறுமையுடன் அந்தப் 'பைல் ஸாகர'த்தில் நீந்த ஆரம்பிப்பார் குமாஸ்தா.

ஒரு 'அர்ஜண்ட்' பைலைப் பார்த்துக் கொண்டு இருக்கும்போது பியூன் வந்து மானேஜர் கூப்பிடுவதாகச் சொல்லுவான். மானேஜரைப் பார்க்கத் தன்னைத் 'தயார்' செய்துகொண்டு புறப்படுவார்.

“என்ன! .... இந்தப் 'பைல்'களில் 'என்க்ளோஷர்' வைக்காமல் கையெழுத்துக்கு அனுப்பி விட்டீரே! ...... உமக்கு எவ்வளவு தடவை சொன்னாலும்......” என்று மானேஜர் முடிப்பதற்குள், தன் ஆயுதமாகிய அசட்டுப் புன்னகையினால் மானேஜரைத் தாக்குவார். “சரி, சீக்கிரம் அதை அனுப்பும்! அத்துடன் 'டி. ஐ. ஜி'க்கு அனுப்பவேண்டிய 'மெமோ'வும் அவசரம். அந்த இரண்டு பைலும் இன்று போயாக வேண்டும்” என்பார் மானேஜர். தன் ஆயுதத்தை மறுபடியும் ஒரு தடவை பிரயோகித்து விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வருவார் குமாஸ்தா.

மணி இரண்டு. 'டிபன்' சமயம். குமாஸ்தா 'பைல்'களில் நீந்துவதை விட்டுச் சற்று நேரம் டிபனைப் பார்ப்பார். 'ஆபீஸர்' என்ன கோபித்துக் கொண்டாலும் ஆத்திரம் வராத குமாஸ்தாவுக்குக் காப்பியில் சர்க்கரை குறைந்து விட்டால் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். மறுபடியும் 'பைல் ஸாகர'த்தில் மூழ்கினாரானால் இரவு 7 மணிக்குத்தான் தலை நிமிர்வார்.

இரவு ஏழு மணி வரை ஆபீஸ் வேலையைச் செய்து விட்டு நடைப் பிணமாக வீட்டுக்கு வந்து சேரும் அவரை, “பக்கத்து வீட்டுச் சிவராமய்யர் சர்க்கரை கார்டு வாங்கி வந்து விட்டார். இவர் வாங்கி வரவில்லை” என்று இரைந்து கொண்டே சகதர்மிணி வரவேற்றால் எப்படி இருக்கும்! ஏசல்கள், இரைச்சல், சண்டை, பூசல்களினிடையே சாப்பிட்டு விட்டு மண்ணெண்ணெய் விளக்கினடியில் உட்கார்ந்து மறுபடியும் 'பைல்'களைப் புரட்டுவார்.

• • •

இப்படி இருக்கிறது குமாஸ்தாக்கள் வாழும் வாழ்வு. கால



சென்னை நகரில் நடந்தது போலவே வெளியூர்களிலும் அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவை நடந்தன. அவ்விதம் கோயமுத்தூரில் நடந்த ஊர்வலக் காட்சி இது.



சேப்பாக்கம் கடற்கரையில் பத்தாயிரம் உத்தியோகஸ்தர்கள் கொண்ட பொதுக் கூட்டம் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமானபோது பிரசங்க மேடை மேற்கண்டவாறு காட்சி யளித்தது.

பத்து மணியிலிருந்து இரவு பத்து மணி வரை ஆபீஸ் வேலை, பிரயோஜனம்......? 30 ரூபாயில் ஆரம்பித்து இரண்டு வருஷத்திற்கு மூன்று ரூபாயாக உயரும் சம்பளத்தில், இரண்டு வருஷத்தில் மூன்று குழந்தைகளாக வளரும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியதுதான்.

குமாஸ்தாக்களே அரசாங்கத்தின் ஜீவநாடிகள். அட்வைசரி சர்க்காரானாலும் சரி, காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சியானாலும் சரி: குமாஸ்தாக்கள்தான் அரசாட்சியின் உயிர்த்துடிப்பு. குமாஸ்தாக்களின் சரியான ஒத்துழைப்பு இல்லாவிட்டால் அரசாங்கத்தின் பாடு அதோகதிதான். அது குமாஸ்தாக்களுக்கு நன்கு தெரிந்ததுதான். இஷ்டப்பட்டால் அவர்கள் அரசாங்கத்தையே ஒரு ஆட்டு ஆட்டிவிடலாம். ஆனால் பொறுமையுள்ள—பொறுப்பறிந்த—குமாஸ்தாக்கள் அப்படிச் செய்ய விரும்பவில்லை.

தபாலாபீஸ்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தால் தற்காலிகமாகவாவது நெருப் பணைக்கும் படையினரைக் கொண்டு தபால்களை விலாசதாரர்களிடம் சேர்த்து விடலாம். 500 மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தால் 45 கோடி மக்கள் கொண்ட இந்தியாவில் தொழிலாளர்கள் கிடைப்பது கஷ்டமல்ல. ஆனால் சர்க்கார் ஆபீஸ் குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தம் செய்தால்—?? மந்திரிகளே சற்று ஆர அமர இருந்து யோசித்துப் பார்க்கட்டும்.

* * *

“இந்த வருஷத்திய 'பட்ஜட்' முடிந்து விட்டது. அடுத்த வருஷத்தில் வேண்டுமானால் ஏதாவது பார்க்கிறேன். நீங்கள் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு வந்ததனால் உங்களுக்கு இப்பொழுது உதவி செய்ய முடியாமையைப் பற்றி வருந்துகிறேன்” என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார் பிரதம மந்திரி பிரகாசம்காரு.

500 ரூபாய் சம்பளத்தை 1500 ரூபாயாக்கிக் கொள்வதற்கு பட்ஜெட்டில் முன் கூட்டியே இடம் கொடுத்து விட்டார் மந்திரி! அப்பொழுதெல்லாம் முப்பது ரூபாய் சம்பளத்திற்காக உயிரையே கொடுத்து உழைக்கும் குமாஸ்தாக்களின் ஞாபகமே இல்லாமல் போய் விட்டது.

“பட்ஜெட் எல்லாம் முடிந்து விட்டது” என்று சொல்லிக் கையை விரிக்கிறாரே பிரகாசம்காரு, அந்த பட்ஜெட் யாரால் தயாரிக்கப்பட்டது? இரவு பகலாகக் கண் விழித்து, கூட்டிக் கழித்து, மண்டையை உடைத்துக் கொண்டு 'பட்ஜெட்' போட்டது பிரகாசம் காருவா, அல்லது ஏழை குமாஸ்தாக்களா? “மறுபடியும் மண்டையை உடைத்துக்கொண்டு மறு பட்ஜெட் தயாரிக்க (Supplementary Budget) உதவுகிறோம்!” என்று அந்தக் குமாஸ்தாக்கள் சொல்லும் போது, அவர்கள் கோரிக்கைகளை நிராகரிப்பது ஒரு பெரிய பொறுப்புடைய மந்திரி சபை செய்யும் காரியமில்லை.

மோட்டார் டிரைவருக்குச் சம்பளம் 90 ரூபாய்: 'போஸ்ட்மேனு'க்கு 60 ரூபாய்: ஆனால் உயிரை விட்டுக் கொண்டு, ஒரு நாளைக்கு 9 மணி நேரம் உழைக்கும் ஏழை குமாஸ்தாக்களுக்குச் சம்பளம் 30 ரூபாய்! எழுத்தில் முப்பது ரூபாய்!! எண்ணில் 30 ரூபாய்!!!

“ஐயோ! 'போஸ்ட்மேன்' 60 ரூபாய் வாங்குகிறானே, நமக்கு வரவில்லையே!” என்று பொறாமைப் படவில்லை. 'போஸ்ட்மே'னுக்குக் கொடுப்பது நியாயமான சம்பளம். அந்த நியாயம் இங்கு மாத்திரமில்லையா? அதை இங்கும் கொஞ்சம் காட்டுங்களேன் என்று தான் கேட்கிறார்கள்.

* * *

'பக்கிங்காம் கர்னாடிக் மில் ஸ்டிரைக்'கைச் சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவர முடியாதவர்கள், குமாஸ்தாக்களின் கோரிக்கைகளுக்கு உடனே இணங்குவார்கள் என்ற நம்பிக்கை இல்லைதான். ஆனால் எல்லா வேலைகளிலும் பொறுமையுள்ள குமாஸ்தாக்கள் இதிலும் பொறுமையை விடப் போவதில்லை. வேலை நிறுத்தத்தை 25-ம் தேதி வரை ஒத்தி வைத்திருக்கிறார்கள்.

ஆகஸ்டு 25-ம் தேதி வரை ஒரு ஏற்பாடும் செய்யா விட்டால் பின்னால் நடப்பதைப் பிரகாசம் கோஷ்டியார் பார்க்காமல் இருந்து விடப் போகிறார்களா, என்ன?

ரேஷன் நாடகம்

விநாஷகன்

சந்தானமய்யர் மூக்குக் கண்ணாடியை எடுத்துப் பிளானலினால் மெருகேற்றிக் கொண்டிருக்கிறார். வாசலிலிருந்து யாரோ ஒருவர், அவருடைய பெயரைச் சொல்லி அழைக்கிறார். சந்தானமய்யர், "வாருங்கள்!" என்று சொல்லுமுன்பே அவர் வெகு சுவாதீனமாக ஹாலுக்குள் பிரவேசித்து நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறார்!

★

சந்தானமய்யர்:—தாங்கள் யாரோ?

வந்தவர்:—உங்களுக்கு ராவ்பகதூர் சின்னசாமி அய்யரைத் தெரியுமோ?

சந்தா (சென்னையிலேயே பிரபல பிரமுகரான அவரைத் 'தெரியாது' என்று சொல்லிக் கொள்ள மனமில்லாதவராய்):—நல்ல கேள்வி கேட்டீர்கள்? பேஷாய்த் தெரியும்!

வந்தவர்:—அவருடைய ஷட்டகர் நான்.

சந்தா:—அப்படிச் சொல்லுங்கோ! ராவ்பகதூர் சின்னசாமி அய்யருக்கு நீங்கள் நெருங்கிய சொந்தக்காரரோ?

வந்தவர் (பெருமையும் அசட்டுச் சிரிப்பும் கலந்த குரலில்):—ஆமாம்; என்னைச் சரியாக அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் பாருங்கோ! சரி; நான் வந்த காரியத்தைச் சொல்கிறேன். என் பெண்ணுக்கு இந்த ஆவணி மாதத்தில் கல்யாணம் செய்வதாக உத்தேசம். உங்கள் பிள்ளையாண்டானின் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு போகலாம்னுதான்......!

சந்தா:—ஓஹோ! அப்படியா? (உள்ளே திரும்பி) உன்னைத்தானே! கொஞ்சம் காப்பி கொண்டாயேன்!

வந்த:—என்ன, காப்பியா? சரி, வரட்டும்! காலையில் ஹோட்டலில் சாப்பிடலாமென்றுதான் இருந்தேன். இப்போது சென்னை ஹோட்டல்களில் சாப்பிடுவதைவிட......

சந்தா:—அப்படியானால் உங்களுக்குச் சொந்த ஊர் சென்னை இல்லையா?

வந்த:—இல்லை; என் ஊர் கருவேலி.

சந்தா:—இந்தாருங்கள்; காப்பி சாப்பிடுங்கள்!

★

காப்பியைக் குடித்த பிறகு வந்தவர் அதிகம் பேசவில்லை. ஏதோ காரிய மிருப்பதாகச் சொல்லி விட்டு வெளியே போய் மறுபடியும் 11-30 மணிக்குத் திரும்பி வருகிறார்.

சந்தானமய்யர் (வந்தவரைப் பார்த்து):—வாருங்கள்; சாப்பிடப் போகலாம்!

வந்த:—சம்பந்தம் செய்வதற்கு முன்னால் சம்பந்தி யகத்தில் சாப்பிடக் கூடாது என்பார்கள். ஆனால், இப்போது சென்னை ஹோட்டல்களில் சாப்பிடுவதைவிட சம்பந்தி யகத்திலேயே சாப்பிட்டு விடலாம்!

★

மத்தியானம் சாப்பிட்டு விட்டுப் போனவர் மறுபடியும் சாயந்திரம் திரும்பி வருகிறார். சந்தானமய்யருடன் டிபன் சாப்பிட்டுவிட்டு, "ராத்திரி எத்தனை மணிக்குச் சாப்பாடு? நான் பாட்டுக்கு அகாலத்திலே வரக்கூடாது பாருங்கள்; நம்மால் பிறத்தியாருக்கு இம்சை உண்டாகாது!" என்கிறார். "ஏழுமணிக் கெல்லாம் சாப்பிட்டு விடலாம்!" என்ற பதிலைக் கேட்டுக் கொண்டு வெளியே போய் ஏழுமணிக்கே வந்துவிடுகிறார். இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, வந்த மனிதர் ரயிலுக்குப் புறப்படுகிறார். சந்தானமய்யர் மெதுவாக, "ஜாதக விஷயம் என்ன ஆச்சு?" என்று கேட்கிறார். "ஊருக்குப் போனதும் எழுதுகிறேன்!" என்று சொல்லி விட்டுக் கம்பி நீட்டுகிறார் வந்தவர்! சந்தானமய்யர் ஒன்றும் புரியாமல் நிலைமையைச் சோதித்துக் கொண்டிருக்கும் போது அவருடைய நண்பர் ஹாலாஸ்யமய்யர் வருகிறார்.

★

ஹாலாஸ்யமய்யர்:—என்ன ஓய், சந்தானமய்யர்! வாசலில் இறங்கிப் போகிறாரே, 'அந்த மனிதர்' உம்ம வீட்டுக்கும் வந்து விட்டாரா?

சந்தா:—என்ன! உங்களுக்கும் அவரைத் தெரியுமா? என்னமோ ஜாதகம் வேண்டுமென்று வந்தவர் சம்பிரமமாய்ச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் போகிறாரே!

ஹாலா:—அட போக்கனும்! நீரும் ஏமாந்து போனீரா? அவர் போன வாரம் என் வீட்டுக்கு வந்து ஜாதகம் வேண்டுமென்று வாங்கிக் கொண்டு இரண்டு நாள் சாப்பிட்டு விட்டுப் போனார். அவர் ஏதோ காரியமாகச் சென்னைக்கு அடிக்கடி வருகிறவராம். இங்கே ஹோட்டல்களில் ஒன்றும் வசதியில்லாததால் கல்யாண வரனிருக்கிறதே யென்று இப்படித் தந்திரமாய் ஜாதகம் கேட்கும் தோரணையில் எல்லாருடைய வீட்டிலும் இரண்டிரண்டு நாள் முகாம் போடுகிறார்!

["அப்படியா விஷயம்? அட பாவி, மனுஷா!" என்று வாயைப் பிளந்த வண்ணம் நிற்கிறார் சந்தானம்.]

கல்கி



LKI ஆகஸ்ட் 25, 1946 4 அணா


உங்கள் குழந்தையின் ஜீரணசக்தி குன்றிருப்பதாக தெரிந்தால்
உடனே கவனிக்கவேண்டும். அது ஈரல்சம்மந்தமாய் இருக்கலாம், இருக்கால் பெருக்கத்திற்கு காரணமாய் இருக்கலாம்.